


# தமிழரசு

16-2-1993 ரூ.1



பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதி கிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR/2687/MS/92/CHARI
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையே சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 11.2.93 அன்று தொடங்கி வைத்தார். முதல்வர் அவர்களுக்கு இரு அணியின் வீரர்களும் அறிமுகப்படுத்தப்பட்டனர். அப்போது இந்திய அணியின் தலைவர் அசாருதீன் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டார்.

## இந்த இதழில்


சட்டப்பேரவையில்
மேதகு ஆளுநர் உரை ... 2

ஜவகர்லால் நேரு 10-வது
தங்கக்கோப்பை இறுதிப்போட்டி ... 6

சிறந்த காவல் நிலையம் ... 9

தருமபுரியின் தொல்பழங்காலம் ... 11

இருமொழிக் கொள்கை:
சட்டமன்றத்தில் முதல்வர் தீர்மானம் ... 13

சட்டமன்றப் பேரவை அறிவிப்புகள் ... 15

தென்னார்க்காட்டில் இளைஞர் வாரவிழா ... 17

படமும் செய்தியும் ... 20

தருமபுரி மண்ணும்
விடுதலைப் போராட்ட உணர்வும் ... 24

தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம் அறிவிக்கை ... 27



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

மாசித் திங்கள் - 5

மலர்:23 இதழ்:16

16-2-1993




**மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே,**

1993 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவர்க்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1993 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் காணும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறேன். 1992 ஆம் ஆண்டின் இறுதி நாள்கள் இந்திய நாட்டிற்குப் பெரும் சோதனைக்காலமாக அமைந்தன. அந்நாள்களில் நமது நாட்டில் பெருமளவில் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதங்கள் விளைந்தன; இவற்றைப் பெரிதும் தவிர்த்திருக்கமுடியும். எனினும், தமிழ்நாடு அமைதியும் நல்லிணக்கமும் நிலவித் தனித்து விளங்கியதோடு, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையில் சீரான முன்னேற்றத்தைக் கண்டது. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடைய தலைமையில் அமைந்துள்ள இவ்வரசு ஆக்கபூர்வமான பயனுள்ள பல திட்டங்களைத் தொடங்கியிருந்தது; மிகக் குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க அரும்பணிகளை ஆற்றியுள்ளது. 1993 ஆம் ஆண்டில் இன்னும் பல அரும்பெரும் சாதனைகளை ஆற்றிட இவ்வரசு ஆர்வத்தோடு பாடுபட இருக்கிறது.

2. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவியேற்பதற்கு முன்னர் தமிழ்நாட்டில் நிலவிய சட்டம்-ஒழுங்கு நிலைமையையும், வெளிநாட்டுப் போராளிகளும், தீவிரவாதிகளும் இம்மாநிலத்தில் பேரளவிற்கு ஊடுருவியிருந்த நிலைமையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். சட்டம் - ஒழுங்கு நிலைமையை மீண்டும் நிலை நாட்டவும், அமைதி, ஒற்றுமையைப் பேணிக்காக்கவும் அவர் மேற்கொண்ட துணிவு மிக்க நடவடிக்கைகள் அனைத்துத்தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளன. வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகளின் தேச விரோத, கவிழ்ப்பு நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டுவிட்டன. கடல் எல்லை ரோந்து நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. கப்பல் படை, கடலோரப் பாதுகாப்புப் படை, மாநிலக் காவல்துறை, சுங்கத்துறை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நடவடிக்கைத் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளது. பெட்ரோலியப் பொருட்கள், ஏனைய பொருட்களைக் கள்ளத்தனமாகக் கடத்துகின்ற சட்டவிரோத நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. பெட்ரோலியப் பொருட்கள், எஞ்சின் ஆயில், கியர் ஆயில், நாட்டு வெடிகுண்டுகள், ஜெலடின் குச்சிகள், வெடி மருந்துகள், படைக் கலன்கள், துப்பாக்கித் தோட்டாக்கள் போன்றவை பெருமளவுக்குக் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்திற்கிடமான நபர்கள் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட பலர் மீது தொடர்புடைய

சட்டங்களின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் போராளிகளால் ஏற்பட்டுள்ள இப்பேராபத்தினை அறவே களையும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தைச் செயற்படுத்துவதை முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்திவந்துள்ளார்கள். தமிழ்நாட்டில் நிலவும் சட்டம்-ஒழுங்கு நிலைமை குறித்துக் குறிப்பாக வெளிநாட்டுப் போராளிகளை ஒடுக்குவதில் மேற்கொண்ட நடவடிக்கை குறித்து மத்திய உள் துறை அமைச்சரும், மத்திய உள் துறை இணை அமைச்சரும் தங்களின் முழு மனநிறைவைத்தெரிவித்துள்ளனர். தீவிரவாதிகளின் சதித்திட்டங்களுக்கு எதிராக இவ்வரசு எப்போதும் விழிப்புடன் இருந்து செயல்படும் என்பதையும், அவர்களது நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்கத் தேவையான அனைத்துமுயற்சிகளையும் ஒன்றுவிடாமல் மேற்கொள்ளும் என்பதையும் அறிந்து நாம் பாதுகாப்பாக உள்ளோம் என்று நிம்மதி அடையலாம். இவ்வாறு திட்டமிட்டுக் கவனமுடன் கண்காணித்து வருவதன் காரணமாகத் தமிழ்நாட்டுக் குடிமக்களிடையே அமைதியும் நல்லிணக்கமும் நிலவ முழுமையாக உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

3. அயோத்தியில் நடந்த நிகழ்ச்சிகளும் அதனையடுத்து நடைபெற்ற கலவரங்களும் நமது தேசத்தின் மனச்சாட்சியை மிகப் பெரிதும் பாதித்தன. நமது அரசியலமைப்பின் அடித்தளமாக விளங்குகின்ற அரசியலமைப்புச் சட்டத்தில் சில அடிப்படைக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் மிக மிக இன்றியமையாததாக விளங்குவது மதச்சார்பின்மையாகும். மதச்சார்பின்மை என்பது நன்னோக்கத்துடன் கூடிய கோட்பாடாகும். உண்மையான மதச்சார்பின்மை, பல்வேறு வகுப்பினரிடையே அமைதியையும் ஒற்றுமையையும் உருவாக்கும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமையும். நமது முதலமைச்சர் அவர்கள் 1992 நவம்பரில் புதுடில்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் தொலைநோக்குடன் தமது அரிய கருத்தை வெளியிட்டார். அதாவது, அயோத்தியில் தகராறுக்குட்பட்ட இடத்தில் இராமர் கோயில் உருவாக அனுமதிக்கலாம் என்றும், அதே சமயம் அங்குள்ள மசூதியை அப்படியே விட்டுவிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். முதலமைச்சர் அவர்கள் அன்று கூறிய கருத்து சகிப்புத்தன்மை உணர்வில் ஆழமாக வேரூன்றிய கருத்தாகும். இந்த உணர்வு, நமது நாட்டில் வாழும் பல்வேறு சமூகத்தினரிடையே அவர்கள் நிலைத்து வாழ்வதற்கு நிலவ வேண்டிய ஒன்றாகும். முதல்வர் அவர்கள் கூறிய கருத்து, தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுக் காலமாக பல்வேறு சமுதாயத்தினரிடையே நிலவி வந்துள்ள சகிப்புத்தன்மை, நல்லெண்ணம் இவற்றில் வேரூன்றிய பண்பாட்டினைப் பிரதிபலிப்பதாக அமைந்ததுள்ளது.

4. நம்நாட்டின் பல மாநிலங்களில் வன்முறைக் கலவரங்கள் எழுந்து தலைவிரித்தாடின; இதன் விளைவாகப் பல நூற்றுக்கணக்கானோர் மடிந்தனர்; துயர வெள்ளம் எங்கும் சூழ்ந்தது. ஆனால் அதே சமயம், தமிழ்நாட்டு மக்கள் சகோதர மனப்பான்மையுடன், ஒருவருக்கொருவர் பாச உணர்வோடு உறுதியாக நின்றனர். இம் மாநிலம் கலவரப் பாலைவனத்திடையே அமைதி நல்லிணக்கச் சோலைவனமாகத் தனித்து நின்றது. சிறிய பதட்டச் சூழ்நிலைகள் எழுந்தபோது, அவை விரைவாகவும், உறுதியாகவும் கட்டுப்படுத்தப்பட்டன. இராணுவத்தையோ, துணை இராணுவப்படைகளையோ உதவிக்கு அழைக்க வேண்டிய சந்தர்ப்பம் எதுவும் நேரவில்லை. இங்கு எழுந்த சூழ்நிலை மிகச் சிறப்பாகச் சமாளிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அருகிலுள்ள கருநாடக மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க அங்கு எழுந்த சட்டம்-ஒழுங்குச் சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக நமது மாநில அரசு நம்முடைய காவல் படையின் இரண்டு கம்பெனிகளை அனுப்ப முடிந்தது. இவ்வாறு, சமுதாய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் பேணிக் காப்பதில் நாம் நாட்டின் பிற பகுதிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளோம் என்பது குறித்து உண்மையில் நாம் பெருமை கொள்ளலாம்.

5. அதே சமயம், இம் மாநிலத்தில் வகுப்புவாதம் தலையெடுக்கவோ, மக்களைப் பிளவு படுத்தவோ இடந்தராமலிருப்பதற்காக, நமது அரசு பயனுள்ள பல

நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் சமுதாய அமைதியும், நல்லிணக்கமும் சிறப்பாக நிலவுகின்றன என்ற களங்கமற்ற நற்பெயர் தொடர்ந்து பேணி வரப்படும். அரசு, தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கு எதிராக விரைந்து செயல்பட்டது. 245 பேர் கைது செய்யப்பட்டனர்; 34 வளாகங்கள் சட்டவிரோதமானவை என்று அறிவிக்கப்பட்டன; 61 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. தமிழ் நாட்டில் நிலைமை இவ்வாறிருக்கையில், பம்பாயில் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக மீண்டும் மீண்டும் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை நமக்குப் பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது. பம்பாயை விட்டுத் தமிழ் பேசும் மக்கள் கிட்டத்தட்ட 4,700க்கும் அதிகமானோர் வெளியேறிச் சென்னைக்கு வந்துள்ளார்கள். இவர்களில் பெரும்பாலோர் தங்களுடைய சொத்துக்களையும், சொந்த உடைமைகளையும் இழந்து விட்டனர். சமூக விரோத சக்திகள் அவர்கள் குடியிருந்த குடியிருப்புகளைக் கூடத் தங்கள் வசப்படுத்திக் கொண்டுள்ளார்கள். பம்பாயில் வாழும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகாராஷ்டிர முதலமைச்சரையும், மத்திய உள்துறை அமைச்சரையும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். பம்பாயை விட்டு வெளியேறி வந்தவர்கள் இழந்துவிட்ட உடைமைகளுக்கு உரிய இழப்பீட்டைப் பெறுவதற்கும், அவர்கள் மீண்டும் அங்கு சென்று தங்கள் தொழிலை அமைதியாக நடத்துவதற்கும் உறுதி செய்ய இம்மாநில அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

6. மாநிலக் காவல் படையினர், இந்தச் சூழ்நிலையைச் சமாளிக்கும் விதத்தில் முழுமையாக ஈடுகொடுத்துப் பணியாற்றினர் என்பதும், மேலும் அவர்கள், புதிய கண்ணோட்டம் கொண்டு, மாறுபட்ட புதிய பாதையில், புதிய குறிக்கோளை உளம் கொண்டு செயல்பட்டனர் என்பதும் மிகுந்த மனநிறைவு அளிக்கக் கூடியதாக உள்ளது. மாநிலக் காவல் படையை ரூ.80.45 கோடி செலவில் நவீனமயமாக்குவதற்கான விரிவான செயற் குறிப்பு ஒன்று மத்திய அரசிடம் அனுமதி பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசு, இதுவரை ரூ.10 கோடி அனுமதித்துள்ளது. அதைக் கொண்டு காவல் படையை நவீனப்படுத்தும் சில உடனடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன நடப்பாண்டில் மேலும் 30 கோடி ரூபாய்க்கு அனுமதியளிக்க மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் உறுதியளித்துள்ளார். மாநில அரசு, காவல் படையை நவீனமயமாக்கும் பணியின் இரண்டாம் கட்டப் பணியை மேற்கொள்வதற்காக, இந்த நிதியை விரைவில் வழங்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம். சீருடைப் படையினர் தேர்வு வாரியத்தின் மூலம் 9,500 காவலர்களைத் தேர்வு செய்யும் பணி விரைவில் முடிக்கப்படும். குறித்த காலப் பயிற்சிக்குப் பிறகு அவர்கள் காவற்படையிற் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் .

7. நீதித்துறை முறையாகச் செயல்படுவதற்குப் போதுமான வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்னும் கருத்தை இவ்வரசு ஒப்புக் கொள்கிறது. நீண்டகாலமாக முடிவு செய்யப்படாமல் இருந்த நீதித்துறையினரின் முறையீடுகளை அரசு பரிசீலித்து, அவர்களுடைய குறைகளில் பலவற்றைத் தீர்த்து வைத்துள்ளது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் அமையும் நீதிமன்றங்கள் உட்பட, பத்தொன்பது நீதிமன்றங்கள் குறித்தகாலத் திட்டத்தின் கீழ்ப் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரூ.4 கோடி செலவில் உயர்நீதிமன்றத்தின் இணைப்புச் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதி மன்றத்தைக் கலந்தாலோசித்து, மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை ஒன்றை அமைப்பது பற்றி தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் நடத்திய விவாதங்களின் போது, நீதி நிருவாகத்திற்கான நிதியொதுக்கீட்டைத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் கொண்டு வருவது பற்றி விவாதித்தார்கள். இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நீதி நிருவாகத்தை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் நிலை உயர்த்துவதற்காகவும் ரூ.123.37 கோடி நிதியொதுக்கீட்டுடன் கூடிய விரிவான பெருந்திட்டம் ஒன்று, புதிய திட்டப்பணிகளின் கீழ் நிதியுதவி பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

8. அரசியலமைப்புச் சட்ட நெறிமுறைகளின் படி, மதுவிலக்கு என்பது அரசின் முக்கியமான கொள்கையாகும். முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில் அமைந்துள்ள இவ்வரசு, தான் அறிவித்திருந்த மதுவிலக்குக் கொள்கைகளுக்கிணங்க, பதவி ஏற்றவுடன் முதன் முதல் முடிவு எடுத்துச் செயற்படுத்திய நடவடிக்கை மாநிலம் முழுவதிலும் உள்ள மலிவு விலை மதுக்கடைகளை ஒழித்ததேயாகும். இந்த நடவடிக்கை ஆண்டுக்கு ரூ.*390* கோடி அளவுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்துவதாக இருந்தபோதிலும், அரசு இதனை மேற்கொண்டது என்பதை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கறிவர். மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவை அமைத்ததன் மூலம், கள்ளச் சாராய விற்பனை, கள்ள மது ஆகியவற்றிற்கெதிராக எடுக்கப்பட்டுவந்த நடவடிக்கை மும்முரப்படுத்தப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் தவறிழைக்கும் அதிகாரிகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கையின் காரணமாகக் கள்ளச் சாராய நிகழ்வுகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளது. மக்கள் தொடர்புச் சாதனங்கள் அனைத்தின் வாயிலாகவும் மதுவின் தீமைகளை எதிர்த்துப் பெருமளவிலான பிரச்சார இயக்கம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. 7 கோடி ரூபாய் செலவில் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவை மேலும் வலுப்படுத்துவதன் மூலம், கள்ளச் சாராயத்தை எதிர்த்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இன்னும் முனைப்பாக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதன்படி, ஒவ்வொரு காவல் துணைக் கோட்டத்திலும் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவின் ஓர் அலகு ஏற்படுத்தப்படும். இவற்றின் துணை கொண்டு, மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபட்டுள்ள சமூக விரோத சக்திகளுக்கெதிராகப் பயனுள்ளவகையில் செயற்படமுடியும். அரசு மக்களின் நலனுக்கே மிக உயர்ந்த முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த வகையில், ஏற்படும் வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாமல், உயர்ந்தபட்ச சமூக நலனையே அரசு பெரிதெனக் கருதி வருகிறது. அயல்நாட்டுவகை மதுக் கடைகளுடன் இணைந்துள்ள "மது அருந்துமிடங்களுக்கு" **(Bars)** வழங்கப்பட்டுள்ள உரிமங்களை, *1993* ஜூனில் தொடங்கும் ஆயத்தீர்வை ஆண்டிலிருந்து ரத்து செய்துவிடுவதென்று அரசு மேற்கொண்டுள்ள முடிவை இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் முழுமனதுடன் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.




9. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் இடஒதுக்கீடு அளிப்பது குறித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளதைத் தொடர்ந்து எழுந்துள்ள நிலைமை நமக்குப் பெருங்கவலை தரக்கூடிய மற்றொரு சமுதாயக் கொள்கைப் பிரச்சினையாகும். மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும்போது, ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீத இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகின்ற தீர்மானம் ஒன்றை *1991* செப்டம்பர் 30ஆம் நாளன்று இந்த அவை நிறைவேற்றியதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு நினைவுகூர வேண்டுகிறேன். இப்போது தமிழ்நாடு, சமூகக் கொந்தளிப்பிலிருந்து விடுபட்டுக் காணப்படுகின்றது என்றால், அதற்கு பாரத் ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படும் வகையில் பரந்த நோக்கோடு எடுத்த குறிப்பிடத்தக்க நடவடிக்கையே காரணமாகும். இப்போது மொத்த இட ஒதுக்கீடு 69 சதவீதமாக உள்ளது. இது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான வாய்ப்புகள் பெருகுவதற்கு உதவியுள்ளது. இவ்வளவு சிறப்பாகத் தொடங்கப்பட்ட இந்த நடவடிக்கையின் பலன், அரசியலமைப்புச் சட்டத்தில் யாருக்காக இந்தச் சிறப்பு விதித்துறை

(−37 ஆம் பக்கம் பார்க்க)

முதலாவது பக்க அட்டைப்படக் கட்டுரை:



# ஜவகர்லால் நேரு 10-வது தங்கக்கோப்பை இறுதிப் போட்டி: வெற்றி பெற்ற வீரர்களுக்கு முதல்வர் பரிசு

ஜவகர்லால் நேரு பத்தாவது தங்கக்கோப்பை சர்வ தேசக் கால்பந்துப் போட்டியின் நிறைவு விழாவும், இறுதிக் கால் பந்தாட்டப் போட்டியும் சென்னை நேரு விளையாட்டரங்கில் 3.2.'93 அன்று மாலை நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, இறுதிக் கால் பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசுகளும் பதக்கங்களும் வழங்கிச் சிறப்பித்தார்.

சென்னை நேரு விளையாட்டரங்கில் ஜனவரி மாதம் 19-ஆம் தேதி முதல் நடைபெற்று வந்த 10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு சர்வதேசக் கால்பந்துப் போட்டியில் இந்தியா உட்பட ருமேனியா, ரஷ்யா, பின்லாந்து, கேமரூன், வடகொரியா, பொலிவியா, இந்தியா ஆகிய ஏழு நாடுகள் கலந்துகொண்டன. இந்தக் கால்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ருமேனியா மற்றும் வட கொரியா அணிகள் மோதின.

ஆரம்ப்ம் முதலே ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. கடந்தமுறை சாம்பியனான ருமேனியா அணி வடகொரிய அணியிடம் தோற்றது. வடகொரியா அணி முதன்முதலாக ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பைக் கால்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. ஆட்டத்தின் ஒவ்வொரு பாதியிலும் வடகொரிய அணியினர் தலா ஒரு கோல் போட்டு 2-0 என்ற கோல் கணக்கில் ருமேனியா அணியினரைத் தோற்கடித்தனர். இந்தப் போட்டியில் ருமேனியா அணியினருக்குக் கோல் போடப் பல வாய்ப்புகள் கிடைத்தும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டது குறிப்ப்பிடத்தக்கதாகும்.

வடகொரிய அணியின் முதல் கோலைப்போட்ட கோய் யாங்-

சன், இந்தக் கோலைப் போட்டதன் மூலம் இந்த ஆட்டத் தொடரிலேயே அதிகக் கோல்கள் போட்ட வீரர் என்ற பெருமையைத் தட்டிச் சென்றார். (இவர் போட்டது மொத்தம் 5 கோல்கள்.)

**ஜவகர்லால் நேரு 10-வது தங்கக்கோப்பையை வென்றதன் மூலம் இந்தக் கோப்பையை வெல்லும் முதல் ஆசிய நாடு என்ற பெருமையையும் வடகொரியா பெற்றது.**

பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் மாண்புமிகு முதல்வரும், போட்டியின் அமைப்புக் குழுத் தலைவருமான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கினார்.

முதலில், இறுதிப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்ற ருமேனியா அணி தலைவருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரன்னர் கோப்பையையும், ரூ.25 ஆயிரம் ரொக்கப் பரிசினையும் வழங்கினார். பின்னர் 10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பையையும், ரூ.50 ஆயிரம் ரொக்கப் பரிசையும் போட்டியில் வென்ற வடகொரிய அணியின் தலைவருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இரு அணிகளைச் சார்ந்த ஒவ்வொரு வீரருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதக்கம் அணிவித்து சான்றிதழ்களை வழங்கினார்.

**இந்திய அணிக்கு விருது**

10-வது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்ட அணிகளில் விதிமுறைகளுக்கு உட்பட்டு நெறி தவறாமல் சிறப்பாக ஆடியதற்காக (Fair play) இந்திய அணிக்கு விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை இந்திய அணியின் மேலாளர் திரு. கே.எஸ். பத்மராஜன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

கடந்த ஆண்டின் சிறந்த ஆட்டக்காரருக்கான விருதினை, இந்திய வீரர் திரு. ஐ.எம். விஜயனுக்கு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இந்தச் சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டியினைச் சிறப்பாக நடத்திய நடுவர்களுக்கும், ஆசிய கால்பந்தாட்டக் கூட்டமைப்பின் அமைப்பாளருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

பின்னர், விழாக் குழுவின் சார்பில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரும், போட்டி அமைப்புக் குழுவின் துணைத் தலைவருமான திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் வெள்ளியினாலான நேரு விளையாட்டரங்க மாதிரியொன்றை நினைவுப் பரிசாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார். அகில இந்தியக் கால்பந்தாட்டக் கூட்டமைப்பின் தலைவர் திரு. பிரியரஞ்சன்தாஸ் முன்ஷி, போட்டியின் இயக்குநர் திரு. சி.ஆர். விஸ்வநாதன் ஆகியோரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள்.

இதுவரை நடந்த ஆட்டங்களிலேயே இறுதி போட்டியன்றுதான் அதிக எண்ணிக்கையில் ரசிகர்கள் வந்திருந்தனர். சுமார் 50 ஆயிரம் ரசிகர்கள் இந்த இறுதிப் போட்டியைக் கண்டுகளித்தனர்.

தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி முத்தையா, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், மற்றும் உயர் அதிகாரிகள், காவல்துறைத் தலைவர் திரு. ஸ்ரீபால், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு. பா. சிவந்தி ஆதித்தன் ஆகியோரும் நிறைவு விழாவில் கலந்துகொண்டனர்.

**நிகழ்ச்சித் தொகுப்பு: சந்திரன்.**



# வளமான வாழ்வுக்கு

## மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

# விஜய்

## உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி, வளமான வாழ்வு இவைகளே எங்களது நோக்கம். நாங்கள் விஜய் உரங்கள், நுண்ணுயிர் உரங்களைத் தயார் செய்கிறோம். உரங்களைத் தயாரித்து விற்பனை செய்வது மட்டுமே எங்கள் குறிக்கோள் இல்லை! "முறையான பயிர்பாதுகாப்பு, சத்துக்களை ஒருங்கிணைந்து அளித்தல், மூதலியவற்றை வலியுறுத்தி விவசாயிகளை ஊக்குவித்து புதிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறோம்".

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், நீண்ட கால வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலமாக நவீன சாகுபடிக் கருத்துக்களை வலியுறுத்தி விவசாயிகள் முன்னேற்றத்திற்கு செயல்படுகிறோம்.


**விஜய் என்றாலே வெற்றி!**




VIJAY

மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்

தருமபுரி மாவட்டம்:



# சிறந்த காவல் நிலையம்

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ் தயாரிக்கச் சென்ற நாம் - மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொகுதியான பருகூரில் சட்டம் ஒழுங்கு நிலைமை எப்படியிருக்கிறது என்பதை அறிய அவ்வூர் காவல் நிலையத்திற்குப் போனோம். முன்னறிவிப்பில்லாமல் நாங்கள் சென்றதால் காவல் நிலைய ஆய்வாளர் திரு. வி. இராமமூர்த்தி அங்கில்லை; அலுவலகப் பணி காரணமாகத் தருமபுரிக்குப் போய்விட்டிருந்தார்; உதவி ஆய்வாளர் திரு. கே.என். முரளி கிடைத்தார்.

நாங்கள் அவரிடம் எங்கள் வருகையின் நோக்கத்தைத் தெரிவித்தோம். ''இந்த மாவட்டத்திலேயே முதல் தரக் காவல் நிலையமாக எங்கள் காவல் நிலையம்தான் சார் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது...'' என்று உற்சாகத்தோடு எடுப்பான குரலில் பேசலானார் திரு. கே.என். முரளி. மேலும் அவர் தெரிவித்தவை இவை:


மாண்புமிகு முதல்வர் அவர்களின் மிகக் கண்டிப்பான ஆணையை அமலாக்கும் விதத்தில், பருகூர் தொகுதியில் கள்ளச்சாராயம் காய்ச்சுவது அடியோடு ஒழிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழில் மூலம் பிழைத்து வந்தவர்களுக்கெல்லாம் நாணயமான வேலைசெய்து குடும்பம் நடத்துமளவுக்குக் கடனுதவி பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இதனால் பக்கத்து மாநிலங்களி லிருந்து யாராவது மது கடத்தி வந்தால் கூட, இத்தொகுதியில் உள்ள பழம் பெருச்சாளிகள் அவர்களை நேரே காவல் நிலையத்திற்குப் பிடித்துக் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறார்கள்.

14 காவலர்கள் இந்தக் காவல் நிலையத்தில் இருக்கிறார்கள்;- ஆனால்,

பருகூரில்- கள்ளச் சாராயம் காய்ச்சுவதே தொழிலாகக் கொண்டிருந்து, பிறகு மனம் திருந்தி, வேறு நல்ல தொழில் செய்து வாழ்வோர்.






அவர்களுக்கான குடியிருப்பில் அத்தனை வீடுகள் இல்லை; அதன் எண்ணிக்கையும், காவலர் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டும் என அவர்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மிகத் துரிதமாக வேலை வாய்ப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வரும் இத்தொகுதியில் பெண் காவலர்களும் நியமிக்கப்பட வேண்டுமென கோரப்பட்டிருக்கிறதாம்.

கொலை, கொள்ளை போன்ற பயங்கரக் குற்றங்கள் எதுவும் இதுவரை இந்தச் சரகத்தில் இல்லை.

பருகூர் காவல் நிலையத்தைப் பற்றி ஒருமுறை ஓசூர் தொகுதி காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினரான திரு. கே.ஏ. மனோகரன் சட்டமன்றத்தில் கூறியது இது: ''கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்கப் பாடுபட்ட பர்கூர் காவல் நிலையக் காவலர்களின் பலன் கருதாத பணிக்காகவே, அரசு அவர்களுக்கு நல்ல பல சலுகைகளையும் செய்யலாம். டி.வி.எஸ்.50 அல்லது சைக்கிளாவது அங்குள்ள ஒவ்வொருவருக்கும் வாங்கித் தரலாம்.''

பருகூர் காவல் நிலையத்தில், சிறியதோர் மருந்துக்கடை அளவில் ஒரு பெரிய முதலுதவிப் பெட்டியே வைத்திருக்கிறார்கள். எங்காவது அடிதடி என்று காயம்பட்டு வருகிறவர்களுக்காகவாம் இது.



பருகூர் மலைப்பகுதியில் நடந்த கள்ளச் சாராய வேட்டை.

பருகூரிலிருந்து தருமபுரிக்கு வந்த நாம், அந்தச் சூட்டோடு சூடாகக் காவல்துறை மாவட்டக் கண்காணிப்பாளரைப் போய்ப் பார்த்தோம்.

தமிழகக் காவல்துறையில் 'ஹானஸ்ட்' குப்புசாமி என்றோர் உயர் அதிகாரி இருந்தாரல்லவா? அந்தப் புகழ்மிக்க அலுவலரின் மகன் திரு. இராமானுஜம் தான் தருமபுரி மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் என்றறிந்த மகிழ்வுடன் நாங்கள் அவர் அறைக்குள் நுழைந்தோம்.

அவர் தலைக்குமேலே - சுவரில் -

'அன்பின் வழியது உயிர்நிலை
அறிவின் வழியது உயர்நிலை
செய்யும் தொழிலே தெய்வம்...'

- என்கிற அர்த்தமுள்ள அறிவிப்புப் பலகைகள் காட்சி தந்தன. கல்லுக்குள்ளும் ஈரம் என்பதைப் போலக் காக்கிச் சட்டைக்குள்ளும் கனிவும், அமைதியும் இருக்கும் என்பதை நிதானமான அவருடைய பேச்சும் நடவடிக்கைகளும் நமக்குணர்த்தின. - பி.எல்.ஆர்.


நல்வாழ்த்துக்கள்

**சந்திரா டிரேடர்ஸ்**
கிருஷ்ணகிரி

எங்களிடம் ரெடிமேட் ரகங்கள், நவீன வீட்டுச் சாமான்கள்
மலிவான விலையில் கிடைக்கும்.

**பஸ்வேஸ்வரா ஸ்டோர்ஸ்**
கிருஷ்ணகிரி நர்சரி,
தொகரப்பள்ளி

எல்லா ரக மாங்கன்றும், இதர பழவகைச் செடிகளும்
தரமானதாகக் கிடைக்கும்.

தருமபுரியின்


# தொல் பழங்காலம்

சுமார் 50,000 ஆண்டுகட்கு முன்னாலேயே தருமபுரி பகுதியில் மனிதன் வாழ்ந்துள்ளான் என்பதை அண்மையில் தொல்லியல் ஆய் வாளர்கள் - இப்பகுதியில் ஆய்வு செய்து கண்டு பிடித்துள்ளனர். கிருஷ்ணகிரி வட்டம் ஹட்டன பள்ளிக்கு அருகே உள்ள மலையடிவாரத்தில் ஏராளமான பழைய கற்காலக் கருவிகள் மற்றும் அதனுடன் கூடிய கிளீவர், கீரிப்பர் எனும் முட்டை வடிவிலுள்ள கல் ஆயுதங்களும் இங்கு சேகரிக்கப்பட்டன; இதனைக் கொண்டே தருமபுரி மாவட்டம் 50,000 ஆண்டுகட்கு முந்தைய வர லாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்று நாம் உறுதியாக எண்ண முடியும்.

அடுத்து பர்கூர் அருகே அமைந்துள்ள தொகரப் பள்ளி, கப்பலவாடி பகுதியில்தான் தொல்லியல் மற்றும் புவியியல் ஆய்வாளர் ராபர்ட்புரூஸ்புட் இப்பகுதியில் முதன்முதலாகப் புதிய கற்காலக் கருவிகளைக் கண்டு பிடித்துள்ளார். மல்லப்பாடி குகையில் தமிழகத் தொன்மையைப் பறைசாற்றும் வகையில் முதன்முதலாக வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்கள் இங்குதான் கண்டுபிடிக்கப் பட்டன. பின்னரே ஆய்வாளர்கள் தமிழகத்தின் பிற பகுதிகளில் இவ்வோவியங்கள் இருப்பதைக் கண்டனர்.

பெருங்கற்காலம் என்ற பண்பாட்டைச் சார்ந்த மக்கள் வாழ்ந்த காலம் சுமார் 2,500 ஆண்டுகட்கு முற்பட்டது. அந்த மக்கள் பயன்படுத்திய பொருட்கள் தருமபுரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் நிறைந்து காணப்படுகின்றன. கல்திட்டை, குத்துக் கல், கல்பதுக்கை, தாழி, ஈமப்பேழை என்னும் அனைத்து வகையான சின்னங்களையும் இம் மாவட்டத்திலே காண முடியும்.

மல்ல சந்திரம், மல்ல சமுத்திரம் ஆகிய பகுதிகளில் அதிக அளவு இதுபோன்ற நினைவுச் சின்னங்கள் குன்றுகளின்மேல் அமைந்துள்ளதைக் காணலாம். பாலக்கோடு, திருமல்வாடி பகுதியில் குத்துக்கல் என்ற நினைவுச்சின்னம், கல் வட் டங்கள் போன்றவற்றைக் காணலாம்.



அடுத்ததுசிறப்பு நடுகற்கள். இங்கு இறந்துபட்ட வீரனுக்குக் கல் எடுத்து — பேரும், அவன் புகழையும் அதில் பொறித்து விழா எடுத்து சிறப்பிப்பது வழக்கம். அவை இங்கு கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து விசயநகர காலம் வரை வழக்கில் இருந்து வருவதை நாம் ஆங் காங்கே கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு காணலாம்.

குழுவின மக்களின் வாழ்க்கை முறையே இங்கு அதிகமாக இருந்துள்ளது. எனவே நடுகல் பண் பாடு சிறப்பு பெற்றுத் திகழ்ந்துள்ளது.

எனவே, தருமபுரி மாவட்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் தொடர்ந்து விசயநகர காலம் வரை மிகவும் சிறப்புடன் திகழ்ந்தமைக்கு தொடர்ச்சியாகக்கிடைக்கும் சான்றுகள் இப்பகுதி யில் ஏராளம், ஏராளம்!

—ச. செல்வராஜ்

## இராமாயணக் கோயில்

தென்கரைக் கோட்டையில் உள்ள இராமர் கோயிலுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு; எல்லாக் கோயில்களையும் போலன்றி, இங்குள்ள கோயிலில் - இராமன், லட்சுமணன், பரதன், சீதை, அனுமன் எல்லோருக்குமே கர்ப்பகிரகத்தில் விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ளன. - வாலிக்கும் இங்கே தனிச் சந்நிதானம்.



BEST
COMPLIMENTS
FROM



# M/s. POPULAR STEELS
# AND
# ROSHAN GRANITE

**Krishnagiri**
**Dharmapuri District**

# அண்ணா-எம்.ஜி.ஆர். ஆகியோர் கண்போல் கட்டிக்காத்த இரு மொழிக் கொள்கையை இவ்வரசு தொடர்ந்து தீவிரமாகப் பின்பற்ற உறுதிபூண்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த இரு மொழிக் கொள்கையில் அ.இ.அ.தி.மு.கழகம் இப்போதும் உறுதியாக உள்ளது. தொடர்ந்து இக் கொள்கையில் உறுதியோடு இருக்கும். தமிழ், மாநில ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் அகில இந்தியத் தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டும் என்கின்ற எங்கள் நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. இனி இருக்கப் போவதும் இல்லை.

அண்மையில், மத்திய அரசு, தொலைக்காட்சியில் தமிழ் மொழி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படும் நேரத்தை மாற்றி இந்தி மொழி நிகழ்ச்சிகளுக்கு, அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இதனால், தமிழக மக்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள் என்பது மட்டுமல்ல; கட்டாயமாக நம் மீது இந்தியைத் திணிக்க, மீண்டும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கருதி, தமிழக மெங்கும் பலத்த எதிர்ப்புக் கிளம்பி உள்ளது.

தமிழக மக்களின் உணர்வுகளே எங்கள் உணர்வுகள் என்ற நிலையில், அந்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில், அவற்றை மத்திய அரசிற்குத் தெரிவிக்கும் முகத்தான் ஒரு தீர்மானத்தை இந்தப் பேரவையில் நிறைவேற்றுவது இந்த அரசின் கடமை எனக் கருதி, கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இத்தீர்மானம் தமிழக மக்களின் ஒட்டுமொத்த உள் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் அமைந்துள்ளது என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், கட்சிப் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன். எனவே, தீர்மானத்தைப் பேரவை ஒருமுகமாக நிறைவேற்றித் தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.



## சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் தீர்மானம்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் (10.2.1993 அன்று) முன்மொழிந்த அரசினர் தனித் தீர்மானம்:

"கட்டாய இந்தி மொழித் திணிப்புக் கூடாது என்று பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சிக் காலத்திலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலும் தமிழக மக்களின் எண்ணத்தை வலியுறுத்தும் வகையில் இம் மாமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்

என. அவற்றில் தெளிவுற வலியுறுத்தப்பட்ட இரு மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதுதான் இந்த அரசின் உறுதியான கொள்கை ஆகும். அதுவே தமிழக மக்கள் அனைவரின் முழுமை யான விருப்பமும் ஆகும்.

இந்தி மொழி பேசாத மக்கள்மீது நேரடியா கவோ அல்லது மறைமுகமாகவோ, இந்தி மொழி யைத் திணிப்பதற்கான நடவடிக்கைகள் அவ்வப் போது எடுக்கப்பட்டு வருவது, இந்தி மொழி பேசாத மக்களுக்குப் பெருங்கவலையையும், அச் சத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. இந்தி மொழி பேசாத மக்கள், மாற்றம் ஒன்றை விரும்பாத வரையிலும் ஆங்கிலமே இணையத்தின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரும் என்ற உறுதிமொழி பண்டித ஜவகர்லால் நேரு அவர் களால் தரப்பட்டு, அவருக்குப்பின் வந்த பாரதப் பிரதமர்கள் அனைவராலும் தொடர்ந்து உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இந்த உறுதிமொழியினை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்திருக்கின்றோம்.

பேரறிஞர் அண்ணாவின் வழியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் அடிச்சுவட்டில் நடந்து வரும் தமிழக அரசு, அப்பெருந்தகையோர்கள் கண் எனக் கட்டிக் காத்து வந்த இருமொழிக் கொள்கையை எல்லா வகையிலும் செயல்படுத்தி வருகிறது. தொடர்ந்து அதனைக் கட்டிக்காத்து தீவிரமாகப் பின்பற்ற உறுதி பூண்டு உள்ளது.

இந்நிலையில், தமிழகத்திற்கு மட்டுமென்றே சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் முதல் அலைவரிசை நிகழ்ச்சிகளைத் தமிழில் இரவு 9.00 மணி வரை ஒளிபரப்பக் கொடுத்திருந்த பிரத்தி யேக அனுமதியை மைய அரசு தன்னிச்சையாகக் கடந்த 1.1.1993 முதல் இரவு 8.45 மணி வரை தான் என்று குறைத்து ஆணையிட்டுச் செயல் படுத்தத் தொடங்கியுள்ளது.

இந்த நேரக்குறைப்பை ஈடு செய்யும் வகையில் தொலைக்காட்சித் தமிழ் நிகழ்ச்சிகளை முன் கூட்டியே தொடங்கப்படுகின்றன என்ற முகாந் திரம் அளித்தாலும், இரவு 9.00 மணி வரை காட்டப்பட்ட தமிழ் நிகழ்ச்சிகள் தற்போது 8.45 மணிக்கே முடிவடைகின்றன என்பதையும், பெரும் பாலான மக்கள் பார்க்கக்கூடிய இந்த நேரத்தை மைய அரசு குறைத்திருப்பது, மறைமுகமாக இந்தி மொழி ஆதிக்கத்தைப் புகுத்த மேற்கொண்ட முயற்சியோ என்று ஐயுறப்படுகிறது.

மேலும் தற்போது தொலைக்காட்சியில் காண பிக்கப்படும் அறிவியல் நிகழ்ச்சிகள், தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் மற்றும் உயர் கல்வி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் பெரும்பாலும் இந்தி மொழியிலேயே அமைந்துள்ளன. எனவே, தமிழ கத்திலுள்ள மக்கள் இந்நிகழ்ச்சிகளினால் பயன் பெறும் வாய்ப்பை இழந்த நிலையில் உள்ளனர். மத்திய அரசின் தகவல் தொடர்புச் சாதனங்கள் இந்த அளவு இந்தி மொழி நிகழ்ச்சிகளுக்கு முக்கி யத்துவம் கொடுத்துள்ளது, இந்தித் திணிப்பை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதோ என்ற ஐயப்பாடு தமிழக மக்கள் மனதில் ஏற்படுத்தி, ஒரு பதட்ட நிலையை உருவாக்கி உள்ளது.

தமிழக மக்களின் மனத்தில் எழுந்துள்ள உண்மையான அச்ச உணர்வுகளையும், கவலை களையும் முழுமையாகப் போக்கும் வகையில் மீண்டும் இரவு 9.00 மணி வரை தமிழ் நிகழ்ச்சி களைச் சென்னைத் தொலைக்காட்சி நிலையத் தினர் ஒளிபரப்ப அனுமதி அளிக்க வேண்டும் என்றும் மாநில மொழியாகிய தமிழ் மொழிக்கு, அரசமைப்புச் சட்டத்தில் கொடுத்துள்ள உரிய இடத்தை மதித்துச் செயல்படும் வகையிலும், பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் அளித்த உறுதி மொழியைக் காக்கும் வகையிலும், மாநில மொழிக்கு மாநிலத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் மத்திய அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் இம் மாமன்றம் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது

---

பொதுமக்களுடன் அன்றாடமும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது அஞ்சல் சேவை. தனது சமூகப் பொறுப்பை உணர்ந்துள்ள அஞ்சல் துறை யும் தன்னால் இயன்றவரை தன் பணியைச் செவ் வனே செய்து வருகிறது.


முன்னேற்றம் என்பது ஒரு தொடர் நிகழ்வு. எனவே, சேவையில் குற்றம் குறைகள் இருப்பின், அவற்றை உடனே களைவது மிகவும் அவசியமா கிறது. இதற்கு உதவும் முகமாக அனைத்து அஞ்சல கங்களிலும் புகார் - ஆலோசனைப் புத்தகம் வைக்கப்பட்டுள்ளது. இதில் குறிக்கப்படுபவை, தகுந்த விசாரணை மற்றும் மேல் நடவடிக்கைக்காக உரிய அதிகாரிக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

அஞ்சலகங்களின் தலைமை நிர்வாக அதி காரிகள், தம்மை நேரில் சந்தித்துப் புகார் தெரி விக்க வரும் பொதுமக்களைச் சந்திப்பதற்காக, புதனன்று எந்தவொருகூட்டத்திலும் கலந்து கொள் ளாமல் அலுவலகத்திலேயே இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

முக்கியத் தலைமை அஞ்சல் அலுவலரால் மூன்று மாதத்திற்கு ஒரு முறை 'டாக் அதாலத்' எனப்படும் அஞ்சல் தீர்ப்பாயம் ஏற்பாடு செய்யப் படுகிறது. இதுகுறித்து முன்பாகவே அறிவிப்பும் செய்யப்படுகிறது. அஞ்சல் கோட்டங்களிலும் கூட இதே முறை பின்பற்றப்படுகிறது. இந்தத் தீர்ப் பாயங்களில் பொதுமக்கள் தமது புகார்களை நேரில் தெரிவித்து உடனுக்குடன் தீர்ப்பும் பெற வழி செய்யப்பட்டுள்ளது.

'Help us to help you' என்பதாக இது அனைவருக்கும் நன்மை அளிப்பதாய் அமையுமன்றோ!

# சட்டமன்றத்தில்...



★ கள்ளச்சாராயம் எங்கு காய்ச்சினாலும் விற்கப் பட்டாலும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தயவு தாட்சண் யம் இன்றி கடும் நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

★ தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே வரி விதிக்கப்படுகிறது. பங்குதாரர்களுக்கு வரி விதிக் கப்படமாட்டாது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் கூறியுள்ளார்.

★ திருத்தணி நகரில் ரூ.1.20 கோடி மதிப் பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட உள்ளது.

★ திருச்சி மத்தியப் பேருந்து நிலையத்துக்கு அரு கில் ராஜாஜி டி.பி. சானடோரியம் அமைந்துள்ள இடத்தில், புறநகர் பேருந்து நிலையம் அமைக்க வும், தற்போதுள்ள பேருந்து நிலையத்தை நகரப் பேருந்து நிலையமாகப் பயன்படுத்தவும் திட்ட மிடப்பட்டுள்ளது.

★ பட்டதாரி ஆசிரியர்களாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள 247 பார்வை யற்றோரில் 154 பேருக்கு இதுவரை வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

★ இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழகத்தில் மொத்தம் 514 கோடி பயணிகள் பேருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள். சுற்றுலா வேன்கள் 7,203 உள்ளன.

★ நலிந்த ஆலைகளை நவீனமயப்படுத்த ரூ.7 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.


★ மதுரை மாநகராட்சி, சாலைகளைப் பழுது பார்த்து பராமரிக்க இவ்வாண்டு ரூ.1.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ திருச்சி வரகூர் தொகுதி உறுப்பினர் திரு.பொன்னுவேல் தமது பகுதியில் பேருந்து வசதி செய்து தரும்படி கோரினார். உடனே மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன் ''நாளை காலை யிலிருந்து குறிப்பிட்ட அப்பேருந்தை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று உறுதி அளித்தார்.

★ நடப்பு ஆண்டில் தமிழகத்தில் சத்துணவுக் கூடங்களுக்குப் பதிலாக 1,400 கட்டடங்கள் கட்டப்படும்.

★ கடந்த ஆண்டு ரூ.35 கோடியில் 500 புதிய கட்டடங்கள் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத் தின்கீழ் கட்டப்பட்டன.

★ பம்பாயில் இருந்து தமிழகம் வந்துள்ள 6000 பேரில் இங்கேயே நிரந்தரமாகத் தங்க உத்தேசித் திருப்பவர்கள் இங்கு தொழில் தொடங்க விரும் பினால் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு தமிழக அரசு தேவையான உதவிகளை



நிச்சயம் செய்யும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்.

★ இந்த ஆட்சி பொறுப்பேற்று 1½ ஆண்டுகளில் ரூ.20,000 கோடிக்கு முதலீடு கிடைத்துள்ளது. புதிய தொழில் முனைவோருக்கு உடனடியாக நிலம், மின்சாரம் தண்ணீர் போன்ற தேவை களைப் புரிந்து அதைச் செய்து கொடுக்க 'டான் சிட்' என்ற கார்ப்பரேஷன் தொடங்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்.

★ அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து பலர் இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பும்போது, முதலில் தமிழ் நாட்டில்தான் முதலீடு செய்ய விரும்புகிறார்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்.

★ ஆராய்ச்சி போன்ற முக்கிய விஷயங்களை மனதில் கொண்டுதான் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் கொடைக்கானலில் அமைய வேண்டும் என்று அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இடத்தைத் தேர்வு செய்தார். ஆனால், அதற்குப் பின்னர் வந்த ஆட்சியாளர்கள் குடிநீர் இல்லை என்று காரணம் காட்டி சட்ட விரோத மாகச் சென்னைக்கு மாற்றிவிட்டனர். இதை ஆராய்ந்த அரசு மீண்டும் கொடைக்கானலுக்கே பல்கலைக் கழகத்தைக் கொண்டு செல்ல முடி வெடுத்து உள்ளது. மாணவர்களுக்கு முழுப் பாதுகாப்பும், பல்கலைக் கழகத்துக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

★ தமிழ்நாட்டில் மொத்தம் பத்து இறால் பண்ணைகள் உள்ளன. இவற்றின் மூலம் நான்கு இலட்சத்து 50 ஆயிரம் டன் இறால் மீன் உற்பத்தி செய்து பிடிக்கப்பட்டுள்ளது. இது இந்த ஆண்டு அதிகரிக்கும். கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் இருந்து இறால் ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் மத்திய அரசுக்கு ரூ.228 கோடி அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது என்று மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

***(4.2.93-இல் தொடங்கி 13.2.93-இல் நிறை வுற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிவிக்கப் பட்ட அரசின் ஆக்கப் பணிகளின் சுருக்கமே இவை.)***

***இந்திய-சிங்கப்பூர் வர்த்தக மண்டலம் குறித்து, சிங்கப்பூரிலிருந்து வந்துள்ள உயர்மட்டக் குழுவினர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில்சந்தித்தனர் (15.2.1993).***



# தென்னார்க்காட்டில் இளைஞர் வாரவிழா

ஒவ்வொரு மாவட்டத் தலை நகரிலும் செயல்பட்டுவரும் 'நேரு கேந்திர'த்தின் நேரு இளைஞர் மையங்கள் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் ஒரு இளைஞர் நலம் பேணும் அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் வாழும் மாணவர் அல்லாத இளையோர்களை இளைஞர் மன்றங்கள், மாதர் சங்கங்கள் மூலமாக ஒருமுகப்படுத்தி ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்துவதே இந்த நேரு இளையோர் மையங்களின் தலையாய குறிக்கோள். தென்னார்க்காட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் இளைஞர் மன்றங்களும், மாதர் சங்கங்களும் நேரு இளைஞர் மையத்தால் கிராமப்புறங்களில் தொடங்கப்பட்டு, கிராமப்புற இளையோர்களிடையே ஒரு எழுச்சியை, விழிப்புணர்ச்சியை, சமுதாயப் பணி ஆர்வத்தை, மத இணக்கத்தை, தேசிய ஒருமைப்பாட்டு உணர்வைப் பல்வேறு செயல் திட்டங்கள் மூலமாக ஏற்படுத்தி வருகிறது.

இளையோர்களுக்கென்று சுய வேலை வாய்ப்புப் பயிற்சி, பல்வேறு அரசுத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்ச்சியை அதைத் தொடர்ந்து தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் இளையோர் தலைமை தாங்கும் தகுதிக்கான பயிற்சிகள் உழைப்பின் உயர்வை உறுதிப்படுத்தி சமுதாயப்பணி முகாம்கள், எழுத்தறிவு அற்றவர்களுக்கு வாழ்வில் ஒளி ஏற்ற முதியோர் கல்வி மையங்கள், கிராமப்புறக் கலை, கலாச்சாரத்தைக் கட்டிக்காக்கும் நடவடிக்கைகள், துடிப்புள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை உருவாக்கும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், மத இணக்கத்தை, சமூக ஒற்றுமையை, தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்கும் பல்வேறு தேச முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் இளைஞர்கள் - குறிப்பாகக் கிராமப்புற இளையோர்கள் பக்குவப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

கிராமப்புற இளையோர் மையங்கள் நலிந்த பிரிவினருக்கு ஆற்றிவரும் சேவைகளின் அடிப்படையில் பார்த்தால் இளைஞர் மன்றங்கள் மொத்தத்தில் கிராமப்புற மக்களுக்கும் அரசுத்துறைகளுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து செயல்பட்டு வருகின்றன.

இப்படி நாட்டு நலனுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற இளைஞர் சக்திகளை நினைவுகூர்ந்து நன்றி சொல்லுகின்ற வகையில்தான் ஒவ்வொரு ஆண்டும் சுவாமி விவேகானந்தர் பிறந்த நாளான ஜனவரி 12-ஆம் நாள் தேசிய இளைஞர் நாளாகவும் 12-ஆம் நாள் முதல் 19-ஆம் நாள் வரை தேசிய இளைஞர் வாரமாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இளைஞர் வாரவிழா ஜனவரி 12-ஆம் நாள் முதல் 19-ஆம் நாள் வரை தென்னார்க்காட்டில் நேரு இளையோர் மையத்தின் மூலம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதற்கான தொடக்க விழா கடலூரில் ஜனவரி 12-ஆம் நாளன்று நடைபெற்றது. மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. எஸ்.ஆர்.ஜான் கிட், ஐ.பி.எஸ்., மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் திரு. டி.ஏ. சுப்பிரமணியம் தலைமையேற்றுத் தொடங்கிவைத்தார்.

இளையோர்கள் பங்குபெற்ற கவிஅரங்கம், பட்டிமன்றம், கருத்தரங்கம், கிராமியப் பாடல்கள், நடனங்கள் ஆகியவை நிகழ்ச்சியில் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்தில் 13-ஆம் நாள் காணை ஒன்றியம் பெருகலம்பூண்டியில் கலைகலாச்சார நாளாகவும்-அதைத் தொடர்ந்து நாள்தோறும் குறிஞ்சிப்பாடி ஒன்றியம் அய்யம்பேட்டை மீனவர் கிராமத்தில் பங்கேற்பு நாளாகவும், கீரப்பாளையம் ஒன்றியம் பெரியநற்குணம் கிராமத்தில் இளையோர் சேவை நாளாகவும், கடலூர் சிங்காரத்தோப்பு கிராமத்திலும் பண்ருட்டி ஒன்றியம் வல்லம் கிராமத்திலும் உடல்திறன் நாளாகவும், மேல்மலையனூர் ஒன்றியம் ஞானோதயம் கிராமத்தில் அமைதி நாளாகவும், வானூர் ஒன்றியம் இராயப்பேட்டைக் கிராமத்தில் திறன் வளர்ப்பு நாளாகவும், சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, ஆங்காங்கே உள்ள இளையோர் மன்றங்களின் மூலம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்தச் சிறப்பு நிகழ்ச்சிகளைத் தவிர்த்து, தென்னார்க்காடு மாவட்டம் முழுவதும் பரவிக் கிடக்கும் இளையோர் மன்றங்கள் மூலமாக இந்த ஏற்பாடு ஒரு வாரக் காலத்தில் ஆக்கப்பூர்வமான பல பணிகள் நடந்தேறியது. இதன்மூலம் இளையோர் சக்தி ஒரு எழுச்சிமிக்க சக்தியாக மாறிவருவதைப் பரவலாகக் காணமுடிந்தது.

நிறைவு நாள் விழா, கடலூரில் 19-ஆம் நாளன்று மாவட்டக் கூடுதல் ஆட்சியர் திரு. வி. இறையன்பு, ஐ.ஏ.எஸ்., தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 1992-ஆம் ஆண்டிற்கான மிகச் சிறந்த சேவை ஆற்றிய இளையோர்களுக்கு இளைஞர் விருதுகளை வழங்கிப் பாராட்டினார்.

மு. பாலசுப்பிரமணியன்
**ஒருங்கிணைப்பாளர்**
**நேரு யுவகேந்திரா**
**தெ.ஆ. மாவட்டம்**

**TNPSC** விளம்பர எண்.5/93

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002.

## அரசு ஊழியர்கள் மற்றும் மற்றவர்களுக்கான துறைத் தேர்வுகள், மே, 1993.

அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்குமான அடுத்த துறைத் தேர்வுகள் (Departmental Tests) 1993-ஆம் வருடம் மே திங்கள் 3-ஆம் நாள் திங்கட்கிழமை முதல் மே திங்கள் 20-ஆம் நாள் வியாழக்கிழமை வரையிலும் நடைபெறவிருக்கின்றன. தேர்வாணைய அலுவலகத்திற்கு இதற்கான விண்ணப்பங்கள் வந்து சேர்வதற்கான கடைசி நாள் 1.3.1993 ஆகும். மே 1992 வரையில் சிறப்புத் தேர்வுகள் என்ற தலைப்பின் கீழ் நடைபெற்ற தேர்வுகள் அனைத்தும் அரசாணை எண்.21, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 10.1.1990-ன்படி ஒன்றாக சேர்த்து ஆணையிடப்பட்டு (Tamil Nadu Government Gazettee) அரசிதழ் எண். 48-D நாள் 18.12.1991-இல் வெளியாகியுள்ளது. இனி அவை துறைத் தேர்வுகள் என்றே அழைக்கப்படும். எனவே விண்ணப்பதாரர்கள் எத்தனை தேர்வுகள் எழுத விரும்பினாலும் ஒரே ஒரு விண்ணப்பத்தினை மட்டும் அனுப்ப வேண்டும். இதற்கான முழு விவரங்களையும் அதற்கான விண்ணப்பப் படிவங்களையும் பெறுவதற்கான கோரிக்கைகள் ரூ.8.00 அஞ்சல் தலையுடன் கூடிய சுய விலாசமிட்ட உறையுடன் (30 x 12 செ.மீ.) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002 அவர்களுக்குத் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ தாங்கள் எழுத விரும்பும் தேர்வு அல்லது தேர்வுகள் போன்ற விவரத்தைக் குறிப்பிட்டனுப்பி பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தினைப் பெறுவதற்கு ஒரே ஒரு கோரிக்கை மனு மட்டும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு ரூ.8.00 அஞ்சல் தலையுடன் கூடிய சுய விலாசமிட்ட உறையுடன் (30 x 12 செ.மீ.) வரப்பெறாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா. முன்பு நடைபெற்ற தேர்வுகளுக்காக வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இத்தேர்வுக்கும் மற்றும் அடுத்து வரும் தேர்வுகளுக்கும் கண்டிப்பாக உபயோகிக்கக் கூடாது. இத்தேர்வுக்கென பெற்ற விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து தேர்வுக் கட்டணத்திற்கான அஞ்சல் ஆணைகளுடன் அல்லது கேட்புக் காசோலையுடன் கையொப்பமிட்ட ஒரே மாதிரியான புதிய இரண்டு பாஸ்போர்ட் அளவுள்ள நிழற்படங்களையும் (Photographs) இணைத்து, விண்ணப்பங்கள் நேரடியாகத் தேர்வாணைய அலுவலகத்திற்கு 1.3.1993 அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு:** இவ்விளம்பரம் அரசுப் பணிகளில் புதிதாக நியமனத்திற்கோ அல்லது தற்காலிகப் பணியில் இருப்பவர்களுடைய பணியினை நிரந்தரப்படுத்துவதற்காகவோ அல்ல.

DIPR/146/MS/93


நல்வாழ்த்துக்கள்

**கிருஷ்ணகிரி வட்டம் லாரி உரிமையாளர்கள் சங்கம்**

**எண்.59, தேர்நிலையத் தெரு, கிருஷ்ணகிரி.**



**லேலண்டு மற்றும் பென்ஸ் வண்டிகளுக்கு உதிரிப் பாகங்கள் கிடைக்கும்.**

தலைவர்: எஸ். சவுரியப்பன்

செயலாளர்: கணேஷ்சிங்

மற்றும் அங்கத்தினர்கள்.

# தெரிந்து கொள்ளுங்கள்

## தானம்

மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒருவர் இரத்த தானம் செய்யலாம். யார் அவர் ? ..... 18 வயது முதல் 60 வயது வரை உள்ள ஆரோக்கிய மான நபர்.

இரத்த தானம் செய்வதால் ஒருவருக்கு எவ்வித இழப்பும் இல்லை. தொண்டுள்ளம் படைத்த நல் உள்ளங்கள் இந்நாட்டில் 70 சதவிகித இரத்தத்தைத் தானமாக வழங்குகிறார்கள். இருப்பினும், ஒட்டுமொத்தத் தேவையில் 50 சதவிகிதம் இன்னமும் தேவைப் படுகிறது.

குறைந்தபட்சமாக 47.5 கிலோ எடையுள்ள ஒரு நபரின் உடலில் நான்கு லிட்டர் இரத்தம் இருக்கும். இதைத் தவிர 800 மில்லி லிட்டர் இரத்தம் சேமிப்பில் இருக்கும். இரத்த தானம் அளிக்கும்போது, அவர் உடலிலிருந்து 350 மில்லி லிட்டர் மட்டுமே எடுக்கப்படும். இந்த அளவு மூன்று நாட்களுக்குள் ளாகவே மீண்டும் அவர் உடலில் சுரந்துவிடும்.

## சக்கர நாற்காலி

இரயில் பயணம் செய்யும் உடல் ஊனமுற்றோர், உடல் நலம் சரியில் லாதவர்கள், வயதானவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு, அவர் களின் உபயோகத்திற்கெனச் சக்கர நாற்காலியை இரயில்வே துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

முக்கிய மாவட்டத் தலைநகர மற்றும் இரயில் சந்திப்பு நிலையங் களில் இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள் ளது. இவ்வசதியைப் பயன்படுத் துவது குறித்த தகவலை இரயில் நிலைய அறிவிப்புப் பலகையில் காணலாம். சக்கர நாற்காலிகள் பயணிகளுக்குப் பயன்படும் வகை யில் அவற்றைச் சீராக வைத்திருக்கு மாறு மண்டல இரயில் நிலையங் களுக்கு இரயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

## சிக்கனமே சிறந்தது!

-கவிஞர். அ.சுப்பையன்



சிக்கனமே சிறந்த தென்போம் - சிறு
சேமிப்பே உயர்ந்த தென்போம்!
எக்காலும் கைகொடுக்கும் - நாம்
ஏற்றம்பெற வழிவகுக்கும்!

எறும்புக்கும் சேமிக்கும் - நல்ல
இயல்புண்டாம்; அறிந்திருந்தும்
பொறுப்புள்ள நாம்மட்டும் - இன்னும்
புத்தியின்றித் திரியலாமா?

ஊதாரிச் செலவுகளை - இனி
ஒருபோதும் செய்யாது
ஏதேனும் சேமிக்கும் - நல்
இயல்பதனைப் பெற்றிடுவோம்!

வரவுக்கு மேல்செலவு - பின்பு
வறுமைக்கே வழிகாட்டும்;
பொறுமையுடன் சேமிப்போம் - நாம்
புதுவாழ்வு பெற்றிடுவோம்!

# அறிவுச்சுடர்

* தவளைகளுக்கு மார்பெலும்புகள் இல்லை.
* சன்னியாசி நண்டுகள் இப்போது நத்தை ஓடுகளுக்குப் பதில் பிளாஸ்டிக் பாட்டில்களில் கூட வாழ ஆரம்பித்து விட்டன.
* அந்திப்பூச்சிகள் விளக்கைச் சுற்றுவதன் காரணம் சந்திரன்தான். சந்திரனைச் சார்பாக வைத்துக் கொண்டு இவை திசைகளை அறிகின்றன. செயற்கை ஒளிகள் இவற்றை திசை திருப்பி விடுகின்றன.
* இரவில் பூச்சிகளை பற்றி ஆராய சிவப்பு அல்லது மஞ்சள் நிற ஒளியைப் பயன்படுத்துங்கள், அவை இவ்வொளிகளை அறிவதில்லை.
* தாய் மூன்று மாதக் குழந்தைக்கு பாலிலிருந்து கெட்டி உணவுக்கு அறிமுகப்படுத்துவது போல் நாய், நரிகள் கூட தான் தின்று ஜீரணித்ததை கக்கி அதை ஊட்டுகின்றன.
* உலகின் 8 சதவீத உயிரினங்கள் பூச்சிகள் தான்.
* கடலில் வளரும் தாவரங்களில் (பாசிகள்) கால் பகுதிதான் நிலத்தில் ஒரு வருடத்தில் வளர்கின்றன.
* உங்களைக் கொட்டிய மறுகணமே தேனீ இறந்து போகிறது.
* சிக்காடா என்ற தத்துப் பூச்சி நான்கு வாரங்கள் மட்டுமே வாழ்ந்தாலும் அதன் லார்வா வளர 17 வருடங்கள் பிடிக்கின்றன.
* மனிதர்களை கைரேகை வைத்துக் கண்டுபிடிப்பது போல் கால்நடைகளை மூக்கு ரேகை வைத்துக் கண்டுபிடிக்கலாம்.

நன்றி: 'கலைக்கதிர்'



ஆந்திரப் பிரதேச சுற்றுலா, கலை மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெ. கீதாரெட்டி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார் (9.2.'93).

# படமும் செய்தியும்

சென்னை நேரு விளையாட்டரங்கத்திலுள்ள சிறிய மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்காக ரூபாய் மூன்று இலட்சத்துக்கான நன்கொடை பத்திரத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் சென்னையிலுள்ள 'யுனிவெர்சல் ஸ்போர்ட்ஸ் டிரஸ்டின்' நிர்வாக அறங்காவலர் செல்வி அபர்ணா விஸ்வநாதன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார் (4.2.'93).





அண்ணா போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களின் ஒருநாள் ஊதியமான ரூ.4,76,562 (ரூபாய் நான்குஇலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து ஐந்நூற்று அறுபத்தி இரண்டு)-க்கான காசோலையை முதல்வர் அவர்களின் வெள்ள நிவாரண நிதிக்காக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார் (4.2.'93).

உயர்நிலை விற்பனைவரி சீரமைப்புக் குழுவின் அறிக்கையை, அக்குழுவின் தலைவர் திரு. பி. விஜயராகவன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் வழங்கினார் (4.2.'92). மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வணிகவரித்துறை செயலர் திரு. தங்கராசு, இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.



**TNPSC**

விளம்பர எண். 6/93

தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் சார்நிலைப் பணியில், அரசு கூர்நோக்கு இல்லங்களின் கண்காணிப்பாளர் (Superintendent of Government Observation Homes) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 1.3.1993 அன்று மாலை 5.45 வரையில் வரவேற்கப் படுகின்றன. (சாதிகளின் அடிப்படையிலான நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவுக்குப் பொருந்தாது.)

**குறிப்புகள்**

1. இக்காலியிடம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. எனினும் ஆண்களும் விண்ணப்பிக்கலாம். தகுதி வாய்ந்த பெண் பணிவேட்பாளர் தெரிவு செய்யக் கிடைக்கப் பெறாவிடில், அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இக்காலியிடம் ஆண் பணி வேட்பாளரால் நிரப்பப்படும்.

2. இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவை, அவரைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,820 - 3,200.

**வயது:** 1.7.1993 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை. (மேலும் சில சலுகைகள் கீழே அறிவிக்கப் பட்டுள்ளன.)

**தகுதி:** (19.2.1993 அன்றுள்ளபடி): அடியிற் குறிப்பிட்டுள்ளவை அல்லது அவற்றிற்கு இணையானவை:

கலை அல்லது அறிவியல் அல்லது வணிகவியல் ஒரு பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பி.ஓ.எல். அல்லது மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ., அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட்., அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட் பட்டம்.

ஆதிதிராவிட வகுப்பினர்,பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவை குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 19.1.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10-க்கான (ரூபாய் பத்து), சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 19.1.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-6-இல் செலுத்தத்தக்க ரூ.10- க்கான) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடனும் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/135/MS/93

With
Best
Compliments
From

**Wholesale and Retail Merchants of**

**Pennagaram Town,**

**Dharmapuri District**



மூதறிஞரும் பேரறிஞரும்

# தருமபுரி மண்ணும் விடுதலைப் போராட்ட உணர்வும்

**இ**ந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களாலேயே மூதறிஞர் என்று போற்றிப் புகழப்பட்டவர்; அந்த அளவுக்குத் தலைசிறந்த ராஜதந்திரியாகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும் திகழ்ந்த ராஜாஜி அவர்கள் பிறந்தது, தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த தொரப்பள்ளி என்கிற ஒரு மிகச் சின்ன கிராமத்திலாகும்.

அவர் பிறந்த - நாட்டு ஓடு வேயப்பட்ட அச்சிறிய வீடு, தமிழ்நாடு அரசால் நினைவுச் சின்னமாக ஏற்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது இப்போது.

தருமபுரி மாவட்ட மண்ணுக்கு, விடுதலைப் போராட்ட வேகத்தை உண்டாக்கும் சக்தி இருக்கிறது என்கிறார்கள் அம் மாவட்டத்தைச் சேர்ந்த மூத்தோர் பலர்.

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு முன்பாகத் தருமபுரி எப்படி ஆங்கிலேயர் வசமாயிற்றுத் தெரியுமா? அங்கிருந்து அரசாண்டு வந்த திப்பு சுல்தான், மூன்றாவது மைசூர் போரில் ஆங்கிலேயரிடம் தோற்றான்; இதன் காரணமாகப் போர் நஷ்டஈடாக ஒரு பெரும் தொகையையும், தருமபுரியையும் அவன் அவர்களுக்குத் தாரைவார்த்தான்.

இம் மாவட்டத்தைச் சேர்ந்த தொப்பூர் கணவாய், மிக அதிகமான போர்களைக் கண்ட பகுதியாகும்.

அதெல்லாம் இருக்கட்டும்; சுதந்திரப் போராட்டத்திற்கும் தருமபுரிக்கும் உள்ள தொடர்பை நாம் கொஞ்சம் பார்ப்போம். இம்மாவட்டத்தில் சுதந்திர தாகம் கொண்டவர்கள் பலர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே விடுதலைப் போராட்டக் களத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் குதித்த காலத்தில் - அவரோடு இந்த மாவட்டத்தில் தோளோடு தோள் நின்றவர்கள் - சுப்பிரமணிய சிவா, டி.என். தீர்த்தகிரி முதலியார், டி.சி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எஸ். ஐயம் பெருமாள், பாப்பாநாயுடு, சுப்பாராவ், மாரண்டஹள்ளி உடையார், தீர்த்தகிரி கவுண்டர், பி.ஆர். முனுசாமி செட்டியார், பி.ஆர். இராசகோபால் கவுண்டர், திரு. ஆர். வெங்கட்ராமன் முதலான பலராவர்.

தருமபுரி மாவட்டத் தியாகிகள் சங்கத்தின் செயலாளர், 77 வயதுப் பெரியவரான திரு. சி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த விவரங்களையெல்லாம் நமக்கு மிக நிதானத்தோடு தெரிவித்தார்.

''ராஜாஜியோடு நான் பேசிப் பழகியதுண்டு; ஆனால் அவர் எனக்கு மிக வேண்டியவராக இருந்தார் என்று நான் சொல்ல மாட்டேன்; ஏனென்றால், வக்கீல் தொழில் காரணமாக அவர் சேலத்திற்குப் போய், அங்கிருந்து சென்னைக்குச் சென்றுவிட்டதோடு எங்களுக்குள் தொடர்பில்லாமல் போய்விட்டது'' - என்று உண்மை

## அன்னையும் குழந்தையும்

★ அண்ணா போக்குவரத்துக் கழகத்திலிருந்து 1987-இல், தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு பிரிக்கப்பட்டதே அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்.

**அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஏ.எஸ்.டி.சி. என்ற ஏடு ஒன்றும் நடத்தப்படுகிறது. எல்லா ஏடுகளிலும் மலர்:1 - இதழ்:1 என்று போடுகிறார்கள் அல்லவா? அதை இந்த ஏட்டில் 'அன்னை:1 - குழந்தை:1' என்று புதுமையாகப் போட்டிருக்கிறார்கள். அப்போக்குவரத்துக்கழக ஊழியர்கள் - நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளைத் தெரிவிப்பதாக இருக்கிறது இது!** - சி.க. சரவணன்

யைச் சொன்ன இவர் - கள்ளுக் கடை மறியல், ஆகஸ்ட் புரட்சி, அந்நியத் துணி பகிஷ்காரம், உப்புச் சத்தியாகிரகத்திலெல்லாம் பங்கேற்றவர்.

1931-இல் காந்தியாரும், 1937-இல் பண்டித நேருவும் அங்கு வருகை தந்ததைப் பெருமிதத்தோடு நினைவு கூர்ந்த இவர் - அக்காலத்தில் சுப்பிரமணிய சிவா ஆற்றிய தேசத்தொண்டுகள் பற்றியும் பெருமகிழ்வுடன் நினைவு கூர்ந்தார்.

ஆகஸ்ட்டுப் போராட்டத்தில் கைதாகிப் பெல்லாரி சிறையில் 6 மாதகாலம் அடைக்கப்பட்ட இவரோடு - திரு. பி. இராமமூர்த்தி (கம்.), வெங்கடாச்சாரியார், நாகராச மணியகாரர் ஆகியோரும்



ராஜாஜி பிறந்த வீடு

சிறைவாசத்தை அனுபவித்தார்களாம்.

''இப்படியெல்லாம் பாடுபட்டுச் சுதந்திரம் பெறக் காரணமாயிருந்த என் போன்றவர்களுக்கு, கடந்த டிசம்பர் ஆறாம் தேதியன்று அயோத்தியில் நடைபெற்ற சம்பவங்கள் மிருந்த மனக் கலக்கத்தை உண்டாக்கிவிட்டன; காந்தியார் காணவிரும்பிய இந்து-முஸ்லீம் ஒற்றுமை இன்னமும் ஏற்படவில்லையே என்ற வருத்தத்தில் நான் இரண்டு மூன்று நாள் சாப்பிடவேயில்லை...'' அவருடைய நா தழுதழுத்தது.

''தமிழ்நாடு அரசு பற்றிய உங்கள் கருத்தைச் சொல்லுங்களேன்?'' என்றோம் நாம்.

கணீரென்ற குரலில் பதில் வந்தது. ''இந்தியாவில் உள்ள பல மாநில அரசுகளும் புரியாத சாதனைகளைச் சாதித்து வருகிறார் தமிழக முதல்வர் டாக்டர்



தியாகி வெங்கட்ராமன்

ஜெ. ஜெயலலிதா அவர்கள். குறிப்பாக என்போன்ற தியாகிகளுக்கு, இவர் செய்திருக்கும் உதவிகளைப் போல, வேறெந்த மாநில அரசாங்கமும் செய்யவில்லை. காங்கிரஸ்காரரான பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுகூட என்போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களுக்கெல்லாம் ஐம்பது ரூபாய் மட்டும் தான் ஓய்வூதியமாகத் தரப்பட்டது. இப்போது அந்தத் தொகை ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதால் எங்களைப் போன்றவர்களின் பதினைந்தாயிரம் குடும்பமே முதல்வரை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறது!'' என்று உளமார்ந்த உற்சாகத்தோடு தெரிவித்தார், தியாகி திரு. சி. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. எம்.எஸ். ஐயம்பெருமாள்:**

தருமபுரி மாவட்டத்தில் தற்போது உயிரோடிருக்கும் வயது முதிர்ந்த தியாகிகளில் ஒருவர் திரு. எம்.எஸ். ஐயம்பெருமாள். இவருக்குத் தற்போது 81 வயதாகிறது. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர். இவரைப் பேட்டி கண்டபோது சொன்னார்:

''1921-இல் முதன்முதலில் தியாகி சுப்ரமணிய சிவாவுடன் சேர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டேன். அப்போது

தியாகி ஐயம்பெருமாள்



எனக்கு வயது 9. அதன் பின்னர் கிராமங்களில் தேசியச் சங்கம் அமைத்து, காங்கிரஸ் தீர்மானங்களை மக்களுக்கு எடுத்துரைத்தேன். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 'தேசீய வாலிபர் சீர்திருத்தச் சங்கம்' அமைத்து, சேரிகளுக்குச் சென்று, காந்தீயக் கொள்கைகளான தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு போன்ற பிரச்சாரங்களைப் பரப்புதல் ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டேன்.

''1939-இல் இரண்டாவது உலகப்போர் ஆரம்பிக்கப்பட்ட போது, யுத்த எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டதற்காக 1940-இல் கைது செய்யப்பட்டு, சுமார் 14 மாதங்கள் வேலூர், கோயமுத்தூர், பெல்லாரி, போன்ற இடங்களில்


### கடைசிப் பக்க அட்டையில்...

சென்னை-மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் குளத்தில்- ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகு, 6.2.93 அன்று நிலைத் தெப்போற்சவம் மிகச் சிறப்பாக நடைப்பெற்ற காட்சி!

புகைப்படம்: ஓம். சுப்பிரமணியம்

சிறை வைக்கப்பட்டேன். சிறையிலிருந்து விடுதலை பெற்ற பிறகு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தருமபுரி மாவட்ட அமைப்பாளராக இருந்து மாநிலம் தழுவிய இயக்கத்தில் கலந்துகொண்டேன். 1941-இல் மீண்டும் யுத்த எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுத் தலைமறைவாகப் பணியாற்றினேன்'' என்று தமது விடுதலைப் போராட்ட காலச் செயல்களை நினைவு கூர்ந்தார்.

இவர், பாப்பாரப்பட்டியில் 5 ஆண்டுகளுக்கு முன்னர் 'கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்' அமைக்கக் காரணகர்த்தாவாக இருந்தார். 1963-லிருந்து சுமார் 14 ஆண்டுகள் சமூக நல ஊழியராகப் பணியாற்றி, அதற்காக மாநில அரசிடமிருந்து ரூ.520 ஓய்வூதியமாகப் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



ராஜாஜி எழுதிய கடிதம்

**தியாகி திரு. ஆர். வெங்கட்ராமன்:**

73 வயதாகும் தியாகி திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைச் சந்தித்தபோது -

''1936-இல் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராகி, காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்தல், கொடியேந்திக் கொண்டு ஊர்வலம் செல்லுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டேன்.

கதர், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்புப் போன்ற திட்டங்களில் கலந்துகொண்டேன். அப்போது எனக்கு 16 வயதிருக்கும். காங்கிரஸ் காரர்களுடன் சேர்ந்து பிரச்சாரத் திற்குச் சென்றபோது ஒரு அரிசன வீட்டில் சாப்பிட்டதற்காக எனது மாமனார் வீட்டிலிருந்து சுமார் 6 ஆண்டுக் காலம் ஒதுக்கிவைக்கப் பட்டேன். எனக்கு 14 வயதில் திருமணம் நடந்தது. பின்னர் 1941-இல் காந்தியடிகளின் தனிநபர் சத்தியாக் கிரக இயக்கத்தில் கலந்து கொண்டதற்காக 3 மாதங்களும், 1942-இல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் ஈடுபட்டதற்காக சுமார் 4 மாதங்களும் சிறைவாசம் அனுபவித்தேன்'' என்று தமது சுதந்திரப் போராட்ட நினைவுகளைத் துல்லியமாக நினைவுபடுத்தி எடுத்துரைத்தார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகத் தமக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் பற்றிக் கேட்டதற்கு, 1989-இல் 100 ரூபாயாக இருந்த ஓய்வூதியத்தை 1992 ஆகஸ்ட் முதல் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆயிரமாக உயர்த்திக் கொடுத்திருப்பதாகவும், தற்போதைய ஓய்வூதியம் திருப்திகரமாக இருப்பதாகவும் கூறினார்.

இறுதியில், சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டதால் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் போனதற்காக வருத்தப்பட்டார்.

## கோழி கூப்பிடும் நேரம்



★ தருமபுரி மாவட்டத்தில் - 'கோழி கூப்பிடும் நேரம்' என்றால் அதிகாலை 5 மணி. 'கூழ் நேரம்' என்றால் காலை 7 மணிமுதல் 9 மணி வரை. 'இரணிய நேரம்' என்பது பகல் 12 மணி. 'உச்ச நேரம்' என்றால் பகல் ஒரு மணி. காலையில் பொழுது விடிந்ததிலிருந்து மதியம் வரை ஒவ்வொரு மணி நேரத்தையும் 'ஒரு மார் பொழுது', 'இரண்டு மார் பொழுது' என்கிறார்கள். இரவு சுமார் 7 மணி முதல் 8 மணி வரை 'களி நேரம்' ஆகும்.

## 'சனோலா!'



**தருமபுரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளியில் தான் - இந்தியாவிலேயே முதன்முதலாகச் சூரியகாந்தி எண்ணெய் ஆலை தொடங்கப்பட்டது.**

**இப்போதுகூட, மற்றெல்லா ஆலைகளிலும் சூரியகாந்தி விதையின் தோலை நீக்காமல் போட்டு எண்ணெய் ஆட்டி வருகிறார்கள்; ஆனால் இங்கேயோ தோல் நீக்கப்பட்ட வித்துக்களே எண்ணெய் ஆட்டப் பயன்படுத்தப்படுகின்றன.**

**1978-இல் ரூ.53 இலட்சம் முதலீட்டில் தொடங்கப்பட்ட இந்த ஆலையில் அப்போது 500 டன் எண்ணெய் எடுக்கப்பட்டிருக்கிறது; 1992-93-இல் 3,500 டன் எண்ணெய் எடுத்திருக்கிறார்கள்; இது தவிர, 1,400 டன் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.**


**இந்த போச்சம்பள்ளி சூரியகாந்தி எண்ணெய் ஆலைக்கு மட்டும், ஒரு நாளைக்கு 40 டன் சூரியகாந்தி விதை எண்ணெய் எடுக்கத் தேவைப்படுகிறது; நாடு முழுவதிலும் இப்போது இதற்கு நிறைய தேவையிருக்கிறது.**

**1978-இல் ஒரு கிலோ 1.75 ரூபாய் விற்ற இந்த வகை எண்ணெயின் இப்போதைய விலை ரூ.10.50 என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!**

**இந்தியாவிலேயே சூரியகாந்திச் செடி பயிரிடுவதில் கர்நாடகம் முதலிடம் வகிக்கிறது தமிழகமோ 5-வது இடம் வகிக்கிறது. அதிலும் குறிப்பாக இந்தப் பகுதியில் விளைச்சல் அதிகம்; இதற்கு ஏற்ற மண்வளமும், சீதோஷ்ண நிலையும் இங்கிருப்பதே அதற்குக் காரணம்.**

**இடையே, வறட்சிக் காலத்தில் நான்காண்டுக் காலம் நிலக்கடலை எண்ணெய் ஆட்டும்படி நேர்ந்தாலும் கூட - இந்த ஆலை மூலம் நேரடியாக 200 பேரும் மறைமுகமாக மேலும் பலரும் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள்.**

**- என். மணி**





**TNPSC** விளம்பர எண். 7/93

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## அறிவிக்கை

நான்காம் தொகுதிப் பணிகளில் உள்ளிட்ட இளநிலை உதவியாளர் (பிணையம் உள்ளது மற்றும் பிணையம் இல்லாதது) வருவாய் ஆய்வாளர், வரித்தண்டலர் தரம்-1, ஊர்நல அலுவலர் தரம்-II காசாளர், பிரச்சார ஆய்வாளர், விழிப்புப் பணி ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் பதவிகளில் நியமனம் செய்வதற்காக வரும் 18.7.1993 அன்று கீழ்க்காணும் மையங்களில் முதனிலைத் தேர்வு (Preliminary Examination) நடைபெறவுள்ளது.

### தேர்வு மையங்கள்

| குறியீட்டு எண். | | தேர்வு மையத்தின் பெயர் | குறியீட்டு எண் | | தேர்வு மையத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 001 | - | கோயம்புத்தூர் | 053 | - | பழநி |
| 002 | - | கடலூர் | 054 | - | பாளையங்கோட்டை |
| 003 | - | தர்மபுரி | 055 | - | பரமக்குடி |
| 004 | - | திண்டுக்கல் | 056 | - | பட்டுக்கோட்டை |
| 005 | - | ஈரோடு | 057 | - | பெரம்பலூர் |
| 006 | - | காஞ்சிபுரம் | 058 | - | பெரியகுளம் |
| 007 | - | கும்பகோணம் | 059 | - | பொள்ளாச்சி |
| 008 | - | சென்னை | 060 | - | பொன்னேரி |
| 009 | - | மதுரை | 061 | - | இராமேஸ்வரம் |
| 010 | - | நாகர்கோயில் | 062 | - | ராசிபுரம் |
| 011 | - | புதுக்கோட்டை | 063 | - | சிவகாசி |
| 012 | - | இராமநாதபுரம் | 064 | - | ஸ்ரீவைகுண்டம் |
| 013 | - | சேலம் | 065 | - | தென்காசி |
| 014 | - | சிவகங்கை | 066 | - | தக்கலை |
| 015 | - | தஞ்சாவூர் | 067 | - | துறையூர் |
| 016 | - | திருச்சிராப்பள்ளி | 068 | - | திண்டிவனம் |
| 017 | - | திருநெல்வேலி | 069 | - | திருச்செந்தூர் |
| 018 | - | தூத்துக்குடி | 070 | - | திருச்செங்கோடு |
| 019 | - | உதகமண்டலம் | 071 | - | திருப்பத்தூர் (வடஆர்க்காடு) |
| 020 | - | வேலூர் | 072 | - | திருப்பூர் |
| 021 | - | விருதுநகர் | 073 | - | திருத்துறைப்பூண்டி |
| (022 | - | நீக்கப்பட்டுவிட்டது) | 074 | - | திருத்தணி |
| 023 | - | அம்பாசமுத்திரம் | 075 | - | திருவள்ளூர் |
| 024 | - | அறந்தாங்கி | 076 | - | திருவண்ணாமலை |
| 025 | - | அரியலூர் | 077 | - | திருவாரூர் |
| 026 | - | அரக்கோணம் | 078 | - | உடுமலைப்பேட்டை |
| 027 | - | அருப்புக்கோட்டை | 079 | - | உசிலம்பட்டி |
| 028 | - | ஆத்தூர் | 080 | - | உத்தமபாளையம் |
| 029 | - | செங்கல்பட்டு | 081 | - | வள்ளியூர் |
| 030 | - | செய்யார் | 082 | - | விழுப்புரம் |
| 031 | - | சிதம்பரம் | 083 | - | விருத்தாச்சலம் |
| 032 | - | குன்னூர் | 084 | - | வாலாஜாபேட்டை |
| 033 | - | தாராபுரம் | 085 | - | ஆர்க்காடு |
| 034 | - | கோபிசெட்டிபாளையம் | 086 | - | ஆரணி |
| 035 | - | கூடலூர் | 087 | - | ஆவடி |
| 036 | - | குடியாத்தம் | 088 | - | பவானி |
| 037 | - | அரூர் | 089 | - | தேன்கனிக்கோட்டை |
| 038 | - | ஓசூர் | 090 | - | தேவகோட்டை |
| 039 | - | கள்ளக்குறிச்சி | 091 | - | நெய்வேலி |
| 040 | - | காரைக்குடி | 092 | - | ஓமலூர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 041 | - | கரூர் | 093 | - | பட்டாபிராம் |
| 042 | - | கோவில்பட்டி | 094 | - | போளூர் |
| 043 | - | கிருஷ்ணகிரி | 095 | - | பூந்தமல்லி |
| 044 | - | மணப்பாறை | 096 | - | ராஜபாளையம் |
| 045 | - | மன்னார்குடி | 097 | - | சங்கரி |
| 046 | - | மார்த்தாண்டம் | 098 | - | சீர்காழி |
| 047 | - | மேலூர் | 099 | - | சங்கரன்கோவில் |
| 048 | - | மேட்டூர் | 100 | - | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 049 | - | முசிறி | 101 | - | தாம்பரம் |
| 050 | - | மயிலாடுதுறை | 102 | - | திருமங்கலம் |
| 051 | - | நாகப்பட்டினம் | 103 | - | வாணியம்பாடி |
| 052 | - | நாமக்கல் | | | |

2. எல்லா பதவிகளுக்கான பணியிடங்கள் தோராய எண்ணிக்கை 2,700. இவ்வெண்ணிக்கை தெரிவின்போது கூடவோ அல்லது குறையவோ செய்யலாம்.

3. நியமன ஒதுக்கீடு

அ. நியமன ஒதுக்கீட்டு விதியை (அதாவது ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பகிரங்க போட்டி போன்ற நியமன ஒதுக்கீடு) பின்பற்றி தெரிவு செய்யப்படும்.

ஆ. 30 சதவிகித பணியிடங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இ. 3 சதவிகித பணியிடங்கள் உடல் ஊனமுற்றோர்க்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு:** மேலே கூறப்பட்ட பெண்களுக்கான 30 சதவிகித இட ஒதுக்கீடும், உடல் ஊனமுற்றவர்களுக்கான 3 சதவிகித இட ஒதுக்கீடும் ஒவ்வொரு துறை அலகிலும், பல்வேறு பதவிகளுக்கென அமைந்த பணியிடங்களைப் பொறுத்தும், இட ஒதுக்கீடு சுழற்சியைப் பொருத்தும் அமையும்.

இ. இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

4. சம்பள ஏற்றமுறை: ரூ.975-25-1150-30-1660

5. தகுதிகள்

அ. வயது: (1.7.1993 அன்று)

1. ஆ.தி.வ./ப.வ., மற்றம் ஆரதவற்ற விதவைகள் -35 வயதிற்குள்.
2. ஆ.தி.வ./ப.வ., மற்றும் ஆதரவற்ற விதவைகள் அல்லாதவர்கள் - 30 வயதிற்குள்.

**குறிப்பு:** 1. ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம., பி.வ. எல்லா வகுப்பையும் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் முதலியோர் புதுமுக வகுப்பு அல்லது மேல்நிலைக் கல்வி அல்லது அதற்குச் சமமான கல்வியில் தேர்ச்சி பெற்றிருப்பின் அவர்களுக்கு வயது வரம்பு இல்லை.

2. 31.3.1991 அன்று பணியிலிருந்து அனைத்து தற்காலிக பணியாளர்கள் மற்றும் 1.4.1986-லிருந்து 31.3.1991 வரை குறைந்தபட்சம் ஓராண்டு தொடர்ந்து பணியாற்றிய பின், பணி நீக்கம் செய்யப்பட்ட, பொது விதி 10 (a)(1) (1)-ன்படி அரசுப் பணியில் நியமனம் செய்யப்பட்ட மற்ற அனைத்து நபர்களும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நபர்களும் நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பைக் கடந்திருந்தாலும், இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். தேவைப்பட்டால் அவர்களுக்கு வயது வரம்பு தளர்த்தப்படும்.

ஆ. கல்வி: (இந்த அறிவிக்கை நாளன்று (அதாவது 3.2.1993 அன்று)

1. இளநிலை உதவியாளர் (பிணையம் உள்ளது மற்றும் பிணையம் இல்லாதது), வருவாய் ஆய்வாளர், வரித்தண்டலர் தரம்-1, ஊர்நல அலுவலர் தரம்-11, காசாளர், பிரச்சார ஆய்வாளர், விழிப்புப் பணி ஆய்வாளர் பதவிகளுக்கு:

குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதி அல்லது பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்று கல்லூரி படிப்பிற்கோ அல்லது மேல்நிலைக் கல்விப் படிப்பிற்கோ சேருவதற்கான தகுதி அல்லது தேர்வாணையத்தால் கருதப்படும் அதற்கு இணையான தகுதி.

2. தட்டச்சர் பதவிக்கு (1) மேலே பத்தி 5(ஆ)(I)-இல் உள்ளபடி மற்றும்

II. அரசுத் தொழில் நுட்பக் கல்வியில் தட்டச்சில் கீழ்க்கண்டவற்றில் தேர்ச்சி:

அ. தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் உயர்நிலை:
(அல்லது)

ஆ. தமிழ் தட்டச்சில் உயர்நிலை மற்றும் ஆங்கில தட்டச்சில் கீழ்நிலை:
(அல்லது)

இ. ஆங்கில தட்டச்சில் உயர்நிலை மற்றும் தமிழ் தட்டச்சில் கீழ்நிலை.

குறிப்பு: மேலே 2(11) (அ)-விலுள்ள தொழிற்கல்வித் தகுதி பெற்ற தட்டச்சர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியில்லாத நபர்கள், இல்லாத பட்சத்தில், 2(11)(ஆ)-விலுள்ள தொழிற்கல்வித் தகுதி உடையவர்களும், மேலே 2(11)(அ) மற்றும் 2(11)(ஆ) பிரிவுகளின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட நபர்கள் இல்லாத பட்சத்தில் 2(11)(இ)-விலுள்ள தொழிற்கல்வித் தகுதி உடையவர்களும் தேர்வுக்கு கருதப்படுவர்.

6. தேர்வுக் கட்டணம்: ரூ.30 (முப்பது ரூபாய் மட்டும்)

குறிப்பு: மேற்படித் தேர்வு கட்டணம், அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியில் (Scheduled Bank) ஏதாவதொரு கிளையில், சென்னை நகரில் வழங்கக் கூடியதாகவும், சென்னை-2, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடியதாகவும் கூடிய கேட்புக் காசோலை (Demand Draft) மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற எவ்வகைகளிலும் அனுப்பப்படும் கட்டணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேட்புக் காசோலை 3.2.1993-க்குப் பிறகு பெற்றிருத்தல் வேண்டும்.

கீழே குறிப்பிட்டுள்ள நபர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்படுகின்றனர்:

அ. 1. ஆ.தி.வகுப்பினர் மற்றும் ப. வகுப்பினர்.
2. தாயகம் திரும்பியோர்.
3. மாத வருமானம் ரூபாய் 350-க்கு மேற்படாத உடல் ஊனமுற்றவர்கள்.

ஆ. இதற்கு முன்னர் மூன்று முறை விண்ணப்பப் கட்டணம் செலுத்துவதினின்றும் விலக்குப் பெறாத பட்டதாரி பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்.

இ. இதற்கு முன்னர் இரண்டு முறை தேர்வுக் கட்டணம் செலுத்துவதனின்றும் விலக்குப் பெறாத முன்னாள் இராணுவத்தினர்.

குறிப்பு: ஆ.தி.வ.ப.வ., மி.பி.வ./சீ.ம., பி.வ. ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், தாயகம் திரும்பிய வர்கள், கொத்தடிமைகள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப் படும் சலுகைகள் மற்றும்/அல்லது தேர்வுக் கட்டணச் சலுகைகள் மற்றும் மற்ற விவரங்கள் கொண்ட தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகள்'' 16.8.89 நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டில் (Bulletin) வெளியிடப்பட்டுள்ளது. செய்தி அறிவிப்பு வெளியீடு, அரசு எழுதுபொருள் மற்றும் அச்சகத் துறையின், 'அரசு வெளியீட்டு விற்பனை மையங்களின்' மூலம் விலைக்கு கிடைக்கப்பெறும். மேற்படி பணி வேட்பாளர்களுக் கான விதிமுறைகள் 1.9.89 நாளிட்ட 'தமிழரசு' ஆங்கிலம் மற்றும் தமிழ் பதிப்புகளில் வெளியிடப்பட்டுள்ளது.

**7. தேர்வுத் திட்டங்கள்**

இப்போட்டித் தேர்வு அடுத்தடுத்து இரண்டு நிலைகளை உடையது. அவை:

1. முதுநிலைத் தேர்வு மூலம் முதன்மைத் தேர்வுக்குத் தெரிவு செய்தல்.
2. முதன்மைத் தேர்வின் மூலம் பதவிகளுக்கு நபர்களைத் தெரிவு செய்தல்.

**7(அ). முதனிலைத் தேர்வின் திட்டம்:**

பாடம்: பொது அறிவு (கொள் குறிவகை 200 வினாக்கள்.)
அதிகபட்ச மதிப்பெண்கள்: 100
கால அளவு: 2 மணி நேரம்.
பள்ளியிறுதி வகுப்புச் சான்றிதழ் (SSLC) தரத்திலான முதல்நிலைத் தேர்வுக்கான பாடத்திட்டம்.

**பொது அறிவு**

1. பொது அறிவியல், 2. இந்திய வரலாறு, 3. இந்தியப் புவியியல்,

4. பொருளாதாரமும் வணிகமும், 5. இந்திய அரசு அமைப்புமுறை, 6. இந்திய தேசீய இயக்கம்,

7. நடப்புக் கால நிகழ்ச்சிகள், 8. அறிவுக் கூர்மைப் போட்டி.

**1. பொது அறிவியல்:** இப்பகுதியில் வரும் வினாக்கள் படித்த ஒரு மனிதனின் பொது அறிவியல் சார்ந்த அறிவினை சோதிக்கும் வகையில்அமையும். அன்றாட வாழ்வில் அறிவியல் சாதனங்கள் கோட்பாடுகள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை அறிந்திருத்தல், போற்றுதல் முதலியனவும் அடங்கும். இயற்பியல், வேதியியல், உயிரியல் ஆகிய பாடத் தலைப்புகளில் வரும் அறிவியல் விதிகள், கருவிகள், புதிய கண்டுபிடிப்புகள், அறிவியல் மேதைகளின் கருப்பொருள், மனித உடலியல், நோய்க் காரணங்கள், நோயினைத் தடுத்தல் மற்றும் நிவாரணம், உணவு, உணவுச் சமன்பாடு, மனித மரபியல், பாலூட்டிகள், பறவையினம், விலங்கினம், சுற்றுப்புறச் சூழ்நிலை, அதன் தூய்மை, கனிமங்கள், கூட்டுப்பொருள், திராவகங்கள், உப்பு மற்றும் தொடர்புப் பொருட்கள், பொருட்களின் இயக்கம் - நியூட்டனின் இயக்க விதிகள், பொருட்கள் பொருட்களின் தன்மைகள், மின்சாரம், தேசிய பரிசோதனைக் கூடங்கள் மற்றும் தொடர்புடைய பாடத் தலைப்புகள்.

**2. இந்திய வரலாறு:** சிந்து சமவெளி நாகரிகம், வேதகால ஆரிய கால வரலாறு, சங்ககாலம், மௌரியர்கள், புத்தமும், சைனமும், குப்தர்கள், வர்தனர் ஆட்சி, பல்லவர் சோழர் மற்றும் பாண்டியர், சுல்தான் மற்றும் மொகலாயர் கால ஆட்சி முறையின் தன்மைகள், நிகழ்ச்சிகள், ஐரோப்பியரின் வருகை, ஆங்கிலேய ஆதிக்கம் அதன் தொடர்பான வரலாற்று நிகழ்வுகள்.

**3. இந்தியப் புவியியல்:** பூமி, பூமியின் வடிவம், அமைப்பு, இயக்கம், பூமியின் சுழற்சியும், அதன் விளைவுகளும், இந்திய இயற்கை அமைப்பு, தட்பவெப்ப நிலை, பருவ காலங்கள், வானிலை, மழை அளவு, இயற்கைச் சீற்றங்கள் - அழிவுகள், இந்திய நகரங்கள், முக்கிய இடங்கள், மலைவாழ் இடங்கள், தேசீய பூங்காக்கள், சரணாலயங்கள், துறைமுகங்கள், விவசாயப் பயிர்கள், கனிமப் பொருட்கள், பெரும் தொழிற்சாலைகள் இட அமைப்பு, வனமும் வன விலங்குகளும், இந்திய மக்கட் தொகை பரவு மற்றும் தொடர்புடைய பாடத் தலைப்புகள்.

**4. பொருளாதாரமும் வணிகமும்:** இந்திய விவசாயம், விவசாயப் பயிர்கள் பயிர்முறை, தொழில் வளர்ச்சி - பெருந் தொழில், சிறு தொழில்கள், கிராமிய குடிசைத் தொழில்கள் - அவற்றின் வளர்ச்சி - வீட்டு வசதி - குடிநீர் வழங்குதல் - இவற்றுக்கான வளர்ச்சித் திட்டங்கள் - விலைவாசிக் கொள்கை - பணப் பெருக்கம் - மக்கட் தொகை வளர்ச்சியும் வேலை யின்மை பிரச்சினையும் - இந்திய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை மற்றும் தொடர்புடைய தலைப்புகள்.

**5. இந்திய அரசு அமைப்பு முறை:** இந்திய அரசியலமைப்பு, சிறப்பியல்புகள் குடியுரிமை - தேர்தல் முறை - பாராளு மன்றமும், மாநில சட்டமன்றங்களும் செயலாட்சி முறை - நீதித்துறை - உள்ளாட்சி அமைப்பு முறைகள் - மத்திய, மாநில அரசு உறவு முறைகள் - மொழிக் கொள்கை - அயல்நாட்டுக் கொள்கை மற்றும் தொடர்புடைய தலைப்புகள்.

**6. இந்திய தேசீய இயக்கம்:** தேசீய சுதந்திரப் போராட்டம், சுதந்திரப் போராட்டத்தில் பால கங்காதர் திலக், கோபால கிருஷ்ண கோகலே, தாதாபாய் நௌரோஜி, மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு போன்ற தலைவர்களின் பங்கு - சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு - பாரதியார், வ.உ.சி. சுப்ரமணிய சிவா, இராஜாஜி மற்றும் தலைவர்கள்.

**7. நடப்புக் கால நிகழ்ச்சிகள்:** சமீப கால அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிகள், அரசியல் செய்திகள், வரலாற்றுச் செய்திகள் - வாணிபம், போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்புச் சாதனங்கள் இவற்றின் வளர்ச்சி - நாட்டியம், நாடகம், ஓவியம், படங்கள் போன்ற நுண் கலைத் துறை வளர்ச்சி - மொழி இலக்கிய வெளியீடுகள், வெளிப்பாடுகள் விளையாட்டுப் போட்டிகள் - பரிசுகள், உலக தேசீய அமைப்புகள், இயக்கங்கள் - சுருக்கு சொல் எழுத்துக்கள் விரிவு - உயர் பதவியில் இருப்போர், புத்தகங்களும் ஆசிரியர்களும், சொல்லகராதி - இன்றைய இந்தியாவின் நிகழ்வுகள் - இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும் மற்றும் தொடர்புடைய செய்திகள்.

**8. அறிவுக் கூர்மைப் போட்டி:** இப்பகுதி வினாக்கள், விண்ணப்பதாரர்கள் கொடுத்துள்ள அட்டவணை மற்றும் விளக்கப் படங்களின் உய்த்துணர்ந்தோ அல்லது உய்த்தறிந்தோ சில முடிவுகளை எடுக்கத்திறமை உள்ளவரா என்பதைக் கண்டறிய ஏதுவாக அமையும். பள்ளிக் கணக்குப் புத்தகங்களிலுள்ள அடிப்படைக் கணிதமுறையும் கேள்விகளாக அமையும்.

**குறிப்பு:** இத்தாளில் கேட்கப்படும் சில கேள்விகள் தமிழ்நாட்டுக்கு சார்புடையனவாக அமையும்.

*7. ஆ. 1.* முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்படும் விபரம்: முதன்மைத் தேர்வு எழுத அனுமதிக்கப்படும் விண்ணப்ப தாரர்கள் முதனிலைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களை இறுதியாகத் தேர்ந்தெடுப்பதற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. முதனிலைத் தேர்வின் முடிவின் பின் முதன்மைத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர் களின் எண்ணிக்கை ஒதுக்கப் பணி விதியின்படி, அந்தந்தத் தேர்விற்குத் தெரிந்தெடுக்கப்படவிருக்கும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை விட சரியாகப் பத்து மடங்கு கூடுதலாக நிர்ணயம் செய்யப்படும்.

*2.* முதன்மைத் தேர்வு எழுதத் தகுதியடைந்தவர்களுக்குத் தேர்வாணையத்தால் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவத்துடன் முதன்மைத் தேர்வின் பாடத் திட்டத்தின் விபரங்கள் அனுப்பி வைக்கப்படும்.

*8.* விண்ணப்பிக்கும் முறை: அ. முதனிலைத் தேர்வில் கலந்து கொள்வோர் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் கண்டுள்ளவாறு 30 x 21 செ.மீ. அளவுள்ள முழுநீள வெள்ளைத்தாளில் சீராக இடைவெளியிட்டு, தட்டச்சு செய்யப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தினையும், வருகைத்தாளையும், பூர்த்தி செய்து கையொப்பமிட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

அ. *'நான்காம் தொகுதிப் பணிகளில் அடங்கிய பதவிகளுக்கான முதனிலைத் தேர்வு - 1993'* என மேலுறையில் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.

இ. விண்ணப்பதாரர் விண்ணப்பத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளை அனுப்புதல் வேண்டும்.



இந்தியாவுக்கான இங்கிலாந்து நாட்டுத் தூதர் சர் நிகோலாஸ் பென்கிங் தமது துணைவியார் திருமதி லேடி பென் உடன் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (9.2.'93).

1. தேர்வுக் கட்டணத்தை கேட்புக் காசோலை மூலம் அனுப்ப வேண்டும். (கட்டணச் சலுகை பெறுவோர் தவிர)

2. வருகைத் தாள் (Attendance sheet)

3. அண்மையில் எடுக்கப்பட்ட ஒரே மாதிரியான பாஸ்போர்ட் அளவு '5 x 7 செ.மீ.) நிழற்படி நகல்கள் இரண்டில் கையொப்பமிட்டு அவற்றின் ஒன்றினை விண்ணப்பத்தில் முதல் பக்கத்திலும் மற்றொன்றினை வருகைத் தாளிலும் ஒட்டி அனுப்ப வேண்டும்.

4. சுயவிலாசமிட்ட 45 காசுகள் கூடுதல் அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட ஓர் அஞ்சல் அட்டை (Post Card).

5. சுய விலாசமிட்ட 12 x 28 செ.மீ. அளவிலான அஞ்சல் வில்லை ஒட்டப்படாத உறை ஒன்று.

6. வயது, கல்வித் தகுதி மற்றும் சாதி ஆகியவைகளுக்குச் சான்றாக சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள்/சான்றிதழ்கள் (attested copies) அல்லது விண்ணப்பதாரரால் சரியாக உள்ளதென சான்றளிக்கப்பட்ட (Self attested) சான்றிதழ்களின் நகல்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஈ. அரசுப் பணி மற்றும் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட துறைகளில் பணி செய்யும் விண்ணப்பதாரர்கள் நேரடியாகத் தேர்வாணையத்திற்கு விண்ணப்பிக்கலாம். அதே சமயத்தில் விண்ணப்பதாரர் இத்தேர்தலில் கலந்து கொள்ளும் விபரத்தை துறைத் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவித்திருப்பதாகவும் உறுதி மொழி அளிக்க வேண்டும்.

உ. தகுந்த தேர்வு கட்டணம் செலுத்தப்படாத, கையெழுத்து இடப்படாத மற்றும் குறைபாடுள்ள விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும்.

ஊ. மாநில அரசுத் துறைகள் மற்றும் மாநில அரசுக்குச் சொந்தமான மற்ற நிறுவனங்களில் பணியாற்றும் குறைந்த பட்சக் கல்வித்தகுதி பெறாத பணியாளர்கள் மேற்படி குறைந்த பட்சக் கல்வித் தகுதியைப் பெறுவதற்கான பொதுக் கல்வித் தேர்வினை (General Educational Test) எழுதுவதற்கு தற்போது விண்ணப்பிக்க வேண்டாம். அது குறித்து அறிவிக்கை பின்னர் வெளியிடப் படும்.

எ. சுருக்கெழுத்து தட்டச்சர்/நேர்முக எழுத்தர் பதவிகளுக்கான தேர்வு குறித்த விளம்பரம் தனியாக வெளியிடப்படும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தேர்வாணையத்திற்கு 8.3.93 அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பப்பட வேண்டும். இத்தேதிக்குப் பின்னர் தேர்வாணையத்திற்கு வந்து சேரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

**சுருக்கங்கள்:**

ஆ.தி.வ. - ஆதிதிராவிட வகுப்பினர்
ப.வ. - பழங்குடி வகுப்பினர்
மி.பி.வ. - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
சீ.ம. - சீர்மரபினர்
பி.வ. - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
ப.போ. - பகிரங்கப் போட்டி

Advertisement No.7/93

# FORMAT

## TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

### APPLICATION FOR PRELIMINARY EXAMINATION FOR POSTS INCLUDED IN GROUP-IV SERVICES, 1993.

1. Examination centre... Code
   (Name to be specified in block letters)

2. Register Number

   (To be assigned by Office)

Paste here a signed copy of recent photograph of passport size (5 cms. x 7 cms.)

3. Details of fee paid

| Name of the Bank | Number of the Demand Draft | Date | Value Rs. P. |
|---|---|---|---|
| | | | |

4. Do you claim fee exemption? If YES, mention relevant category under which exemption is claimed............................................................................................................ YES NO

5. Name and address

   a) Name in CAPITALS
   (as recorded in SSLC)

   b) Father's/Husband's Name

   c) Present Postal address

PIN

6. Date of birth
(as recorded in SSLC)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| Day | | Month | | Year | | | |

Example Write 1st September 1967 as

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 0 | 9 | 1 | 9 | 6 | 7 |

Do you claim age relaxation? Yes No

If YES, mention the relevant category ____________________

7. SEX
(Tick the relevant Box)

| 01 | 02 |
|---|---|
| Male | Female |

8. (a) Religion ____________ (b) Name of Community ____________
(Name of Religion and Community to be specified in block letters clearly)

(Tick the relevant Box

| | | |
|---|---|---|
| 01 | SC | |
| 02 | ST | |
| 03 | BC | |
| 04 | Others | |
| 05 | MBC/DC | |

9. Do you possess the requisite minimum educational qualification?
(Tick the relevant box) YES NO

| SSLC | Higher Secondary | Degree | Post Graduate |
|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 |

10. Do you posses the requisite , technical qualification for the post of typist?
If YES, tick the relevant box. YES NO

| Subject | Language | Exam. Grade | Code |
|---|---|---|---|
| Type writing | Tamil | Higher/Senior | 01 |
| | | Lower/Junior | 02 |
| | English | Higher/Senior | 03 |
| | | Lower/Junior | 04 |

11. Do you claim any preference on account of being:-
(If YES, evidence to be produced)

a) Destitute Widow

| YES | NO |
|---|---|
| 01 | 00 |

b) Physically Handicapped: (Specify nature of handicap by tick mark)

| Partially blind/one eyed | |
|---|---|
| YES | NO |
| 02 | 00 |

| Totally blind | |
|---|---|
| YES | NO |
| 03 | 00 |

| Dumb | |
|---|---|
| YES | NO |
| 04 | 00 |

| Deaf | |
|---|---|
| YES | NO |
| 05 | 00 |

| Orthopaedic | |
|---|---|
| YES | NO |
| 06 | 00 |

c. If you claim any concession state reasons therefor.

---

12. **DECLARATION**

I hereby declare that all the particulars furnished in this application are true, correct and complete to the best of my knowledge and belief. In the event of any information being found false or incorrect or ineligibility being detected before or after the examination, action can be taken against me by the Commission.

I have read the notification advertised and 'Instructions etc., to candidates' carefully and I hereby undertake to abide by the instructions therein.

I further declare that I fulfil all the eligibility conditions prescribed for admission to the examination.

* I have informed my employer in writing that I have applied for this examination.

(* Strike off this, if not applicable).

SIGNATURE OF THE APPLICANT

DATE:

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION
# MADRAS-2

## ATTENDANCE SHEET

Preliminary Examination for the posts included in Group-IV Services - 1993

(To be filled by applicant)

Register Number: | | | | | | | | |

(To be filled by office)

Name of the applicant.........................................................

Date of birth......................................................................

Communication address.......................................................

Examination Centre.............................................................

Code: | | | |

Paste here a signed copy of your recent passport size photograph (5 x 7 c.m.)

| Date and Time | Examination Subject | Applicant's Signature |
|---|---|---|
| | | |

DIPR/195/MS/93

# பார்த்தோம் படித்தோம்

**புதுமையான புத்தாண்டு இதழ்!**

1.1.93 இதழ், முதல் மற்றும் நான் காம் அட்டை அருமை. புரட்சித் தலைவர் வாழ்க்கைக் குறிப்பு படித்து மகிழ்ந்தேன். புத்தாண்டு இதழ், புதுமையான இதழாக மலர்ந்திருந்தது!

- எஸ். ரங்கராஜ்
பள்ளிப்பாளையம், (கோவை)

'வாழும்போதே வரலாறு' புரட்சித் தலைவர் வாழ்க்கை வரலாறு, மற்றும் ஆசிய பசிபிக் நாடுகள் மாநாடு' பற்றிய கட்டுரையும் சிறப்பாக இருந்தன.

- எஸ். அப்துல் ரபீக்
சின்னசேலம்
(தென்னார்க்காடு மாவட்டம்)

'உழவர் உயர்வுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை' கட்டுரை பயனுள்ள தாக இருந்தது.

- என். குப்புசாமி
புங்கோடைகாளிபாளையம், (திருச்சி)

'உழவர் உயர்வுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை' கட்டுரை, உழவர் களுக்குப் பயன்தருவதாகும்.

- வி. சென்றாயன்,
கருப்பூர், (சேலம்)

எம்.ஜி.ஆர். நினைவகம் முகப்பு, படு சூப்பர்!

- க. ஜெயகாந்தன்
சிறுபுலியூர்.

'மூளைக் காய்ச்சலைத் தடுப்பது எப்படி?' கட்டுரை பாராட்டத்தக்கது. பொதுமக்களுக்கு மிகவும் பயன்தர வல்லது.,

'தீர்த்தமலை' பற்றிய விவரங்கள் படித்து மகிழ்ந்தேன். இதுபோன்ற சிறப்பு வாய்ந்த கட்டுரைகளை ஒவ்வொரு இதழிலும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

- கே. அனந்தநாராயணன்
கன்னியாகுமரி

மயிலை சீனி வேங்கடசாமி பற்றிய கட்டுரை, தற்காலத் தமிழாராய்ச்சியாளர் களுக்கு ஓர் வழிகாட்டியாக அமையும் என்பது திண்ணம்.

- என். குப்புசாமி
புங்கோட்டை, (திருச்சி)

'வலிப்பு நோய் - சில செய்திகள்' கட்டுரை, பல நல்ல செய்திகளை வழங் கியது. இந்த நோயைக் குணமாக்கும் முறையைக் கூறியிருப்பது, மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

- அ. சூசைமேரி
அணிலாடி,
(தென்னார்க்காடு மாவட்டம்)

## தொடரட்டும் மாவட்ட மலர்கள்

***16.1.93*** இதழ் கண்டேன். தருமபுரி மாவட்டம் தொடர்பான சிறப்புகளை அறிய முடிந்தது. தமிழ்ப் ப்லகலைக் கழகத் துணைவேந்தர், கவிஞர் நா. காமராசன் ஆகியோரின் பாடல்கள் சிறப்பு. ஒவ்வொரு மாவட்டமும் 'தமிழரசு' இதழால் சிறப்பு அடையட்டும்.

**—மு. இளங்கோவன்**
**தமிழியல் துறை**
**புதுவைப் பல்கலைக் கழகம்**
**புதுவை.**

புத்தாண்டில் (16.1.93) தொடங்கி உள்ள, மாவட்ட மலர்கள் வெளியிடுதல் திட்டத்தில், தருமபுரி மாவட்ட மலர் வெளிவந்துள்ளதில் மகிழ்வடைகின்றேன். எதை எப்படி அளிக்க வேண்டும் என்ற உணர்வுடன் செய்திகள் வழங்கப்பட்டு உள்ளன. அட்டைப்படமும், பாதுகாத்து வைத்துக் கொள்வதற்கேற்ப அமைந்து உள்ளது. பாராட்டுக்கள்.

- கே.சி. கிருஷ்ணன்
தருமபுரி-2.

தருமபுரி மாவட்டம் தொடர்பான கட்டுரைகள் மற்றும் சுவையான செய்திகள் படிக்கவும் பாதுகாக்கவும் உபயோகமாக இருந்தன.

- எல். மாணிக்கவாசகம்
சங்கரன்கோவில்

தருமபுரி மாவட்டம் பற்றிய செய்திகள், வளர்ச்சிப் பணிகள் எல்லாமே தேனினும் இனியனவாக இனித்தன.

- ப. முருகேச பாண்டியன்
கரப்பாடி (கோவை).

எம்.ஜி.ஆர். திருவுருவப்பட முகப்பு படுஜோர். அதைக் கண்ணாடி போட்டு மாட்டிவிட்டேன்.

- க. ஜெயகாந்தம்
சிறுபுலியூர்.

டாக்டர் ஔவை நடராசன், கவியரசு நா. காமராசன், கவிஞர் இளந்தேவன், கவிஞர் பி.வி. கிரி இவர்களின் எல்லாக் கவிதைகளும் போற்றும்படி இருந்தன.

— இன்பவல்லி வாசுதேவன்
கீரைசாத்து.

## வழிமுறைகள் கண்டறிவோம்!

**சிறுநீரகம் செயலற்றுப் போவதால் ஆண்டுதோறும் 80,000 நோயாளிகள் இந்தியாவில் உயிரிழக்க நேரிடு கிறது என்பது அதிர்ச்சியான உண்மையாகும்.**

**பொருத்தமான மாற்றுச் சிறுநீரகம் கிடைக்காமல் போவதும், அதிகச் செலவு பிடிக்கும் மருத்துவமும் இதன் வெவ்வேறு பரிமாணங்கள். அதே சமயம் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தலும், 'டயாலிஸிஸ்' சிகிச்சையும் இத்துறையில் பெரும் சாதனைகள். வருமுன் காத்தல் சிறந்ததெனினும், வந்தபின் மாற்றுச் சிறுநீரகம் பொருத் துதல் நல்லது. 'எய்ட்ஸ்' அபாயம் பரவியுள்ளதால், இதில் கவனமாய்ச் செயல்பட வேண்டும் எனச் சொல்ல வும் தேவையோ?**

**சிகிச்சைக்குத் தேவைப்படும் விலையுயர்ந்த சாத னங்கள், கருவிகள் மற்றும் மருந்திற்கு மாற்றாக, செலவு குறைந்த வழிமுறைகள் கண்டறியப்பட வேண்டும்; கிராமப்புறங்களில் இதற்கான சிகிச்சை வசதிகள் கிடைக்க வேண்டும்; சிறுநீரகத்தைத் தானமாக அளிக்க பலர் முன்வர வேண்டும். இந்தப் பாதிப்புக்குப் பலியா வோர் எண்ணிக்கை இவ்வழிகளால் கணிசமாகக் குறை யக்கூடும்.**

(—5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயற்றப்பட்டுள்ளதோ அந்த மக்களுக்கு முழுமையாகச் சென்றடைவதற்குச் சிறிதுகாலம் பிடிக்கவே செய்யும். இந்தச் சூழ்நிலையில், மொத்த இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாகக் குறைக்க வகை செய்யும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்க நடப்பது தமிழ்நாட்டில் நடைமுறையில் சாத்தியப்படாத ஒன்று என்பது தெளிவு. இட ஒதுக்கீட்டில் திடீரென்று குறைப்பு செய்தால், அது சமூகக் கொந்தளிப்பை ஏற்படுத்தும்; அதனை நம்மால் தாங்கிக் கொள்ள முடியாது. மேலும், உச்சநீதிமன்றம் உத்தரவிட்டவாறு, இட ஒதுக்கீடு வழங்குவதில் பின்தங்கிய வகுப்பினரிடையே முன்னேற்றம் அடைந்தவர்களை நீக்கிவிடுவது (Separation of the creamy layer) என்பது மிகப்பலவான இடர்ப்பாடுகளை உருவாக்கக் கூடிய ஒன்றாகும். ஆகவே, இந்தப் பிரச்சினைகளில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை மறுஆய்வு செய்யும்படி கேட்டுக் கொள்ளவும் அரசு தீர்மானித்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஆராய நிரந்தரமான குழு ஒன்றும் அமைக்கப்படும்.

*10.* பாரத் ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய கொள்கைகளையும், திட்டங்களையும் நிறைவேற்ற இவ்வரசு முற்றிலும் உறுதி கொண்டுள்ளது. பதவியேற்ற பின்னர் உடனடியாக, இவ்வரசு மெரினா கடற்கரையில் அறிஞர் அண்ணாவின் சமாதிக்கருகில், அன்பிற்குரிய மறைந்த தலைவரின் நினைவாகப் பொருத்தமான நினைவுச் சின்னம் ஒன்றினை அமைக்கும் பணியை மேற்கொண்டது. ரூ.1.55 கோடி செலவில் ஒரு பெருஞ்சிறப்பு வாய்ந்த புதிய நினைவுச் சின்னம் அமைக்கும் பணி பன்னிரெண்டே மாதத்தில் முடிக்கப்பெற்றது ஒரு சாதனையாகும். பாரத் ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த அழகிய நினைவுச் சின்னம் பொதுமக்களின் அனைத்துப் பிரிவினரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. பொது மக்கள் இங்கு பெருந்திரளாக வருகைதந்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

*11.* அருஞ்சாதனை என்று கூறுமளவிற்கு மிகக் குறுகிய கால அளவான 7 1/2 மாதங்களில், ரூ.40 கோடி செலவில் சென்னையில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள புதிய ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தினை அண்மையில் பாரதப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். பொறியியல் துறையில் வியக்கத்தக்க சாதனையான, பிரம்மாண்டமான, மலைக்க வைக்கக்கூடிய இந்த விளையாட்டரங்கம், ஆர்வக்கிளர்ச்சியும் உள்ளத்து எழுச்சியும் கொண்ட தமிழக இளைஞர்தம் உணர்வுகளை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. தமிழ்நாடு இதற்கு முன்னர் இரண்டுமுறை நேரு தங்கக்கோப்பை சர்வதேசப் போட்டியை நடத்தும் வாய்ப்பினை இழந்துள்ளது. இத்தகைய பிரம்மாண்டமானதொரு திட்டத்தைத் தொடங்கி நடத்த முடியுமா? அதுவும் உரிய காலத்தில் முடிக்க இயலுமா? என்ற ஐயப்பாடு பலருக்கும் எழுந்தது. இன்று இந்த விளையாட்டரங்கம், முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கிற்கும், உறுதிப்பாட்டிற்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஒப்பற்றதொரு கட்டுமானச் சிறப்புடைய இந்த விளையாட்டரங்கம் ஆசியாவிலேயே தலை சிறந்ததாக விளங்குகிறது. இந்த விளையாட்டரங்கத்தில் மேற்கூரையமைப்புடன், தனித்தனியே பொருத்திய இருக்கைகளுடன் 40,000 பேர் உட்கார்ந்திருந்து போட்டிகளைக் கண்டுகளிக்கும் வசதி உள்ளது. இந்த விளையாட்டரங்கத்தில், இரவும் பகலும் விளையாட்டுப் போட்டிகளை நடத்த இயலக்கூடிய மிக நவீன ஒளிவிளக்கு ஏற்பாடு, உலகம் முழுவதும் தொடர்பு கொள்ளக்கூடிய அனைத்துவகைத் தொலைத் தொடர்புச் சாதன ஏற்பாடுகள், உயர்வகை விளையாட்டு வீரர்களுக்கான உயர்தர வசதிகள், கணினிமயமாக்கப்பட்ட 'ஸ்கோர் போர்டு', மின்னணுவியல் கண்காணிப்பு ஏற்பாடு, "குளோஸ்டு சர்கியூட் டி.வி" அமைப்பு ஆகியவை உள்ளிட்ட மிக நவீன, மிக உயர்தர வசதிகள் உள்ளன. பெருமை கொள்ளத்தக்க வகையில், குறுகிய கால அளவிற்குள் விளையாட்டரங்கம் கட்டும் திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததும், பத்தாவது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை சர்வதேச அழைப்பு கால்பந்தாட்டப் போட்டியை இந்த விளையாட்டரங்கத்தில் நடத்தியதும் இவ்வரசு செயற்கரிய அரும்பெரும் திட்டங்களையும் நிறைவேற்றி முடிக்கும் திறனைக் கொண்டுள்ளது என்பதனை மிக நன்றாக வெளியுலகுக்கு உணர்த்திய பெருஞ்சாதனைகள் ஆகும்.

*12.* இந்த அரசு பதவியேற்றபோது நிலவிய கடுமையான நிதி


நெருக்கடியை அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர். *1991-92* ஆம் ஆண்டுக்காக ஒப்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டம், அதாவது ரூ.*1,605* கோடிக்கான திட்டப் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படுமா என்பது குறித்துப் பெருத்த ஐயப்பாடுகள் எழுந்தன. உண்மையில், *1991-92* ஆம் ஆண்டுக்கு ஆகிய திட்டச் செலவு ரூ.*1,651* கோடி; இது திட்ட இலக்கையும் விஞ்சியது என்பது பெரும் மனநிறைவளிக்கக் கூடியதாகும். *1992-93* ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு, ரூ.*1,486* கோடி அளவில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முதலமைச்சரிடம் தெரிவித்தபோது, அவர் *1992-93* ஆம் ஆண்டில் ரூ.*1,751* கோடி திட்ட ஒதுக்கீட்டை எய்த தமிழ்நாடு ஒரு வழியைக் கண்டுபிடிக்கும் என்று வலியுறுத்தினார் என்பதையும் இங்கு நினைவுகூர வேண்டும். நடப்பாண்டில் திட்டச் செலவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மிக மிகச் சிறப்பாக உள்ளது. இது *1992-93* ஆம் ஆண்டிற்கான ரூ.*1,751* கோடி திட்ட ஒதுக்கீட்டையும் விஞ்சக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. *1992-97* ஆம் ஆண்டுக்கான எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பரிசீலனை செய்கையில் அப்போது நிலவிய கடுமையான நிதி நெருக்கடி காரணமாக அதனைப் பயனுள்ள வகையில் முடிவு செய்வது குறித்துப் பெருத்த ஐயப்பாடுகள் எழுந்தன என்பதை அவையின் உறுப்பினர்கள் நினைவுகூரலாம். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக, ரூ.*10,200* கோடி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலளிக்குமாறு மத்திய திட்டக்குழுவை ஏற்றுக்கொள்ளச் செய்வதில் முதலமைச்சர் அவர்கள் வெற்றியடைந்துள்ளார்கள். இவ்வாறாக, இந்த ஒதுக்கீடு, ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டைவிட குறிப்பிடத்தக்க வகையில் மிகப்பெரும் அளவிற்கு, அதாவது *77* சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் ஆண்டான *1992-93* ஆம் ஆண்டில், ஒதுக்கீடான ரூ.*1,751* கோடியை விஞ்சுகின்ற நிலையில் தமிழ்நாடு உள்ளது. இது, தற்போது தமிழ்நாடு உரிய வளர்ச்சிப் பாதையில் செல்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. வளர்ச்சி நடவடிக்கைகளுக்குப் புதிய உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையிலேயே மனநிறைவளிக்கிறது. இந்த உண்மை, முதலமைச்சர் அவர்களுக்கும் மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவருக்கும் இடையில், அண்மையில் *1992* நவம்பரில் நடைபெற்ற கூட்டத்தில், *1993-94* ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.*2,101* கோடியாக முடிவு செய்யப்பட்டது என்பதிலிருந்து மீண்டும் மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு, *1992 - 93* ஆம் ஆண்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டைவிட *20* சதவீதம் அதிகமாகும். தமிழ்நாட்டை மீண்டும் விரைந்த வளர்ச்சிப் பாதையில் கொண்டுவருவதில் இவ்வரசின் சிறப்பான சாதனை குறித்து எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்கமுடியாது.

*13.* தமிழ்நாட்டில் *1992* நவம்பரில் ஏற்பட்ட புயல், வெள்ளம் மாநிலத்தைப் பெரிதும் சேதப்படுத்தியது. *238* பேர் உயிரிழந்தனர்; *5.93* இலட்சம் ஏக்கர் நிலத்தில் வளர்ந்து நின்ற பயிர்கள் சேதமடைந்தன; *1.71* இலட்சம் குடிசைகள் சேதமடைந்தன. சாலைகள், பாசன ஆதாரங்கள், பொதுக் கட்டிடங்கள் ஆகியவை உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. முதலமைச்சர் அவர்கள் வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு, நிவாரண நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டார். நிவாரணப் பணிகளை விரைவாகவும் திறம்படவும் மேற்கொண்டது அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. புயல், வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களின் அளவை விவரிக்கும் குறிப்பும், ரூ.*530* கோடி அளவிற்கு நிதியுதவி கோரும் குறிப்பும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிடுவதற்காகப் பாரதப் பிரதமர் அவர்கள் வந்தபோது, முதலமைச்சர் அவர்களும் உடன் சென்றார்கள். விரிவாக விவாதித்த பின்னர், பாரதப் பிரதமர் அவர்கள் இம்மாநிலத்திற்குக் கூடுதலாக ரூ.*50* கோடி வழங்குவதாக அறிவித்தார்கள். இத்தொகை, *1993 - 94* ஆம் ஆண்டில் மாநிலத்திற்குச் சேரவேண்டிய இடர் நிவாரண நிதியின் மத்திய அரசின் பங்குத்தொகையில் *50* சதவீதமான ரூ.*14.63* கோடியுடன் கூடுதலாக வழங்கப்பட்டதாகும். பாரதப் பிரதமர் அவர்கள் அளிப்பதாக உறுதியளித்த ரூ.*50* கோடி, மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்குக்குரிய முன்பணமாக மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை, *1993* மார்ச்சில் சரிக்கட்டப்படவுள்ளது என்பது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. அரசு ஏற்கெனவே பரவலாக வெள்ள நிவாரணப் பணிகளையும்,

சீரமைப்புப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. இடருதவி, உழவர்கள், மீனவர்கள், ஏனையோர்க்கு நிவாரணம், சாலைகள், பாசன ஏற்பாட்டுத் திட்டங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு அவசர சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.68.52 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. வெள்ள நிவாரணச் செலவு, மாநிலத்திற்குக் கடுமையான நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. ஒன்பதாம் நிதிக் குழு பரிந்துரைத்த இடர் நிவாரணநிதி ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது. உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று பாரதப் பிரதமர் அவர்கள் முதலமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்கள். அதற்கிணங்க, மொத்தம் ரூ.2,560 கோடி மூலதனச் செலவில் திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, இத்திட்டத்தினை உலக வங்கிக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டத்திற்கு உலகவங்கி விரைவில் அனுமதி அளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

14. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வளர்ந்து நின்ற பயிர்களும், அண்மையில் நாற்று நடப்பட்ட பயிர்களும் சேதமடைந்த போதிலும், வளர்ந்த பயிர்களைக் காப்பாற்றுவதற்கும் புதிதாகப் பயிரிடுவதற்கும் பயனுள்ள வகையில், கணிசமான அளவிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. நல்ல விளைச்சல் தரக்கூடிய பயிர்களைப் பயிரிட இயலும் வகையில், விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவை போதிய அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இதற்கு **முன்னர் எப்போதும் அடைந்திராத அதிக அளவு உற்பத்தியான 90.70 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை அடைந்துள்ளது என்பதை அவையின் உறுப்பினர்கள் அறிவர். 1992-93 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியானது, எய்துவதற்கு மிகக் கடினமான 100 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவையும் தாண்டிச்செல்ல இருப்பதன் மூலம், முன் எப்போதும் கண்டிராத மேற்சொன்ன சாதனையை அடையக்கூடும் என்பது மனநிறைவளிக்கத்தக்கதாகும்.** இது உண்மையிலேயே **தமிழ்நாட்டின் அயராது உழைக்கும் உழவர்களின் உயர்ந்த சாதனையாகும். அரிசி உற்பத்தி எப்போதும் கண்டிராத உயர் அளவான 76 இலட்சம் மெட்ரிக் டன்னை எய்தும் என மதிப்பிடப்பட்டுள்ளது.** நடப்பாண்டில் பருத்தி உற்பத்தி கூட மிக உயர்ந்த அளவை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநில விவசாயிகளின் மிகச் சிறந்த முயற்சிகளுக்கு அரசு முழுமையாக ஆதரவளித்து வந்துள்ளது. தொழில்நுட்ப விரிவாக்க ஆதரவு, இயற்கைச் சீற்றங்களின்போது விரைந்து நிவாரணம் வழங்கல், போதுமான ஆதரவு அளித்தல் ஆகியவகைகளில் அளிக்கப்பட்ட புதுமையான தொகுப்பு உதவிகள், ரூ.55 கோடி அளவிற்கு அரசு வழங்கிய விரிவான கடன் நிவாரணத் தொகுப்புதவி ஆகியவை தமிழ்நாட்டு விவசாயிகள் நல்ல பயன்களை அடைய உதவின. பருவமழை அனுகூலமாக இல்லாதுபோனாலும்கூட, இப்படிப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகளைத் தொடர்ந்து நிலைபெறச் செய்ய உறுதி செய்வது நமது முயற்சியாக இருக்கும். இந்தக் காரணத்திற்காகவே, தரிசு நிலங்களைச் சாகுபடி செய்தல், ஒருங்கிணைந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாடு, ஏனைய வறட்சிக்காப்புப் பணிகள் ஆகியவை மீண்டும் வலியுறுத்தப்படும்.

15. ஊரகப் பொருளாதாரம் விரைந்த வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்காகக் கால்நடை வளர்ப்பு-மீனளம் போன்ற விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளுக்கு அரசு மிகுந்த முன்னுரிமை அளித்துள்ளது. ரூ.68.19 கோடி மூலதனச் செலவில் பால் பெருக்கத் திட்டம் (மூன்றாம் கட்டம்) செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் மாநிலம் முழுவதும் உள்ள பால்பண்ணை விவசாயிகளுக்குப் புதிய வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. **தமிழ்நாட்டில், பால் உற்பத்திப் பெருக்கத்தில் கிட்டத்தட்ட ஒரு புரட்சியே நிகழவுள்ளது.** 1992 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 93.81 இலட்சம் லிட்டராக இருந்த மொத்தப் பால் உற்பத்தி, 1997 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 115.22 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும். பால் கூட்டுறவு ஒன்றியங்கள், பால் கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் கையாளப்படும் பாலின் அளவு தற்போதைய




அளவைவிட 50 சதவீதம் உயர்த்தப்படவிருக்கிறது.

16. இருவகையான அணுகுமுறைகளின் வாயிலாக உவர் நீர் இறால் பண்ணைக்குப் பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, பெரிய தொழில் நிறுவனங்கள் இறால் பண்ணை அமைக்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. இரண்டாவதாக, சிறு விவசாயிகளை ஒருங்கிணைத்து இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுவருகின்றன . பாக் நீர்ச்சந்தியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன், ரூ.7.50 கோடி செலவில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உவர் நீர் இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டை ஏற்படுத்தப்படும். கடலோர மாவட்டங்கள் ஐந்தில் 6,050 மீனவர்கள் பயனடைவதற்கு ரூ.15.88 கோடி செலவில் ஒருங்கிணைந்த ஆழ்கடல் மீனள வளர்ச்சித் திட்டம் ஒன்று அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது.

17. இந்தியப் பொருளாதாரத்தை, குறிப்பாக, இந்தியத் தொழில் துறையை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதும், அதன் வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படும் ஊக்கமளிப்பதும் நாட்டின் புதிய பொருளாதாரக் கொள்கையின் பொதுவான நோக்கமாகும். இருப்பினும், தேசிய அளவில் புதிய முதலீடுகள் திரட்டப்படுவது குறிப்பிடத்தக்க அளவிற்கு வேகம் பிடிக்கவில்லையென்பது கவலை அளிப்பதாக உள்ளது. புதிய முதலீட்டுக்கும், விரைவான வளர்ச்சிக்கும் உகந்த சூழ்நிலைகளை நாம் உருவாக்க வேண்டும். மாநிலத்துக்கே உரிய புதிய தொழில் கொள்கையை முதலமைச்சர் விளக்கியுள்ளார். பயனுள்ள நடவடிக்கைக்கு உரிய விரிவான முழுமையான அடிப்படைத் திட்டமாக இக்கொள்கை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தேசிய அளவில் புதிய முதலீடு திரட்டுவது எளிதாக இல்லாதபோது, தமிழ்நாட்டில் மாநில அரசு மேற்கொண்ட பயனுள்ள நிலைத்த முயற்சிகள் நல்ல பயன்களைக் கொடுத்துள்ளன. ரூ.8,500 கோடி மூலதனத்தை உள்ளடக்கிய புதிய முதலீட்டுத் திட்டங்களைக் குறித்துக் கலந்து பேசி முடிவுகாண, 1992 டிசம்பரில் முதலமைச்சர் விரிவான ஆலோசனைகளை நடத்தினார். **இதனால், மாநிலத்தில் உள்ள பல்வேறு திட்டங்களில் மொத்தம் ரூ.20,000 கோடி புதிய முதலீட்டைப் பெறுவதில் அரசு வெற்றி கண்டுள்ளது.** முதலமைச்சர் அவர்களின் உறுதிமிக்க முயற்சிகளாலும், தமிழ்நாட்டில், தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலை நிலவுவதைப் படிப்படியாகப் பலரும் தெரிந்து கொண்டுள்ளபடியாலும், மேலும் சிறப்பான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இருப்பதனாலும், தேசியச் சூழ்நிலையில் இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், அரசு இத்துறையில் தனிச்சிறப்பான சாதனையை எய்த முடிந்துள்ளது. மிகக் குறைந்த கால அளவிற்குள், இந்த முதலீடுகள் நிறைவேற்றப் பெறுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கிறது.

18. இம்மாநிலத்தில் விரைவுபடுத்தப்பட்ட தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகப் புதிய முயற்சிகள் பல ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு தொழில் அடிப்படைவசதிக் கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம் (TACID) என்கிற புதிய கழகம், இம்மாநிலத்தில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துவதில் முனைப்புடன் செயல்பட்டுவருகிறது. வலுவான தொழில்களின் அடிப்படை வசதிக் கட்டமைப்பு வளர்ச்சிக்கு இந்த வளர்ச்சி மையங்கள் திட்டம் புதிய வேகத்தை அளிக்கும். இந்த வளர்ச்சி மையங்களை உரிய கால அளவுக்குள் நிறுவிமுடிப்பதற்காக, இம்மாநிலத்திற்கு வழங்குவதாக உறுதியளித்த நிதியை வழங்குமாறு மத்திய அரசை இத்தருணத்தில் கேட்டுக்கொள்வது பொருத்தமாக இருக்கும். இந்தோ-சிங்கப்பூர் வர்த்தக ஏற்பாடு குறித்த கோட்பாட்டிற்கு முழு வடிவம் கொடுக்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன உத்தேச ஏற்பாடு குறித்த விவரங்களைத் தயாரிக்க, உயர் அளவிலான அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் சிங்கப்பூர் சென்றுள்ளது. இது குறித்த சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று நடந்தேறி வருகிறது; சென்னை அருகே இப்புதிய

வர்த்தக மையத்தை உருவாக்கும் பணிகளை விரைவுபடுத்துவது இதன் நோக்கமாகும். இப்புதிய அமைப்பின்கீழ், பெரிய அளவில் முதலீடுகள் செய்வதற்குத் தமிழ் நாட்டின் சூழ்நிலை ஏதுவாகவுள்ளது.

19. புதிய தொழில் மேம்பாட்டினை ஊக்குவிக்கச் சிறந்த வழிவகையாக விளங்குகிற அடிப்படைவசதிகளில் போதிய முதலீடுகளைச் செய்வதற்கு அரசு உறுதி செய்ய வேண்டுமென்பது நமது தெளிந்த கருத்தாகும். மின்விசைத் துறையில் அதிக நாட்டமும் முக்கியத்துவமும் மிகச் சரியான முறையில் அளிக்கப்பட்டுள்ளது. மின்விசைத் துறையில் அரசு சிறந்த சாதனையை எய்தியுள்ளது. தமிழ்நாட்டில் மின் வெட்டு அறவேயில்லை. தூத்துக்குடி அனல்மின் நிலையம் தேசிய அளவில் தலை சிறந்த மின் உற்பத்தி நிலையங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மிக அதிகமாக, ஒட்டுமொத்த திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதன் விளைவாக, 1992-1997 கால அளவில் மின்விசைத் துறைக்கு ரூ.3,000 கோடி ஒதுக்க முடிந்துள்ளது. இத்துடன், கூட்டுத்துறையிலும், தனியார் துறையிலும் கணிசமான அளவுக்குப் புதிய முதலீடுகள் திரட்டப்பட்டு வருகின்றன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின் உற்பத்தித் திறனை 1,630 மெகாவாட் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துடன், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு போதிய அளவுக்குப் புதிய திட்டங்களுக்கு இசைவு வழங்கப்பட்டுள்ளது. ரூ.7,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,500 மெகாவாட் உற்பத்தித் திறனில் கூட்டுத் துறையில் ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்க மற்றும் மின் உற்பத்தித் திட்டம், ரூ.3,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் கடலூரில் தனியார் துறையில் 1,000 மெகாவாட் அனல் மின் திட்டம், ரூ.1,000 கோடி செலவில் நெய்வேலியிலிருந்து கிடைக்கக்கூடிய உபரி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தித் தனியார் துறையில் ஒவ்வொன்றும் 250 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அனல் மின் திட்டங்கள், ஆகியவை மின் துறையில் இசைவு அளிக்கப்பட்ட புதிய திட்டங்கள் ஆகும் . இவ்வாறாக, மொத்தம், நிறுவவிருக்கும் புதிய திட்டங்களில், ரூ.11,000 கோடி முதலீடு செய்யப்படவுள்ளது. இத்திட்டங்களின் மூலம் மொத்த உற்பத்தித்திறன் 3,000 மெகாவாட் ஆகும். ஒன்பதாவது திட்டக்காலத்திற்கான புதிய முதலீட்டிற்கு முன்கூட்டியே திட்டமிடுவதானது, தமிழ்நாட்டில் நீண்டகால அளவில் மின்விசை கிடைப்பதை உறுதி செய்வதாக உள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த இத்துறைக்கு அத்தகைய ஒருமித்த பயனுள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வகையிலான மொத்தப் பெருமையும் அரசையும், குறிப்பாக முதலமைச்சர் அவர்களையும் சார்ந்ததாகும். மின் அனுப்புகை, மின் பகிர்வு ஆகியவற்றிற்குப் பெரிய அளவில் முதலீடு செய்யும் திட்டத்துடன், மின்விசைத் தரம் குறித்தும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

20. தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு குறைந்துள்ளது. முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு மன்றங்களில் இப்பிரச்சினையை முன்வைத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக, மொத்தம் ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் 'அரோமாட்டிக்ஸ்' திட்டம் (AROCHEM) ஒப்புதலளிக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பணி தற்போது நடந்தேறி வருகிறது. துணைத் தொழில்கள் உட்பட, மொத்த முதலீடு முடிவில் ரூ.4,000 கோடியாக இருக்கும்; அதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 70,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மத்திய அரசு முதலீடு குறித்து முடிவு எடுக்கவேண்டிய ஏனைய பல்வேறு திட்டங்கள் நிலுவையில் உள்ளன. குறிப்பாக, 'பம்பாய் ஹை'யிலிருந்து தென் மாநிலங்கள் அனைத்திற்கும் இயற்கை எரி வாயுவைக் கொண்டுவர தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை மேற்கொள்ள, 1992 நவம்பரில் நடைபெற்ற தென் மண்டலக் குழுக் கூட்டத்தில் தெளிவுபடுத்தியவாறு தென்மாநிலங்களின் முதலமைச்சர்களுடைய ஒருமித்த கருத்தை இங்குக் குறிப்பிட விழைகிறேன். முதலமைச்சர் அவர்கள், இந்தத் தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தைச் செயலாக்கும்படி அழுத்தமான வேண்டுகோள் விடுத்துள்ளார். இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கு உறுதியளிக்கும் வகையில்,

தென் மாநிலங்கள் அனைத்தும் கூட்டாகச் சேர்ந்து நிதியளிக்கலாம் என்றும்கூடத் தெரிவித்துள்ளார். மத்திய அரசு, அண்மையில் தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்திற்குக் கொள்கை அளவில் அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். பன்னாட்டு நிதித்துறை மையமாக விரைந்து வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு, தென் மண்டலத் தொழில் வளர்ச்சி வங்கியை ஏற்படுத்தும் கருத்தினையும் முதலமைச்சர் அவர்கள் முன்வைத்துள்ளார்கள். பொருளாதாரத்துறையில் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டநிலையில், அனைத்திந்திய நிதி நிறுவனங்கள் நாடு முழுவதும் பரவலாக அமைந்து மண்டல அளவில் ஓரளவு சமநிலை அமைய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இந்நாட்டின் நிதியமைப்பு ஏற்பாட்டைச் சீரமைக்கும் வகையில், இந்தக் கருத்தினை விரைவில் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும். கூடங்குளம் அணுமின் திட்டத்திற்குப் புத்துயிரளிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்ய மாநில அரசு தன்னுடைய இசைவைத் தெரிவித்துள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்படத் தொடங்க இயலும் வகையில், மத்திய அரசு இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து விரைவில் முடிவெடுக்க வேண்டியது அவசியமாகும்.

*21.* மத்திய அரசு செயற்படுத்தத் தொடங்கியுள்ள புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்குப் பொதுவாக ஆதரவளிக்கின்ற அதே சமயம், அக்கொள்கைகளைச் செயல்படுத்துவதால் ஏற்படுகின்ற பொருளாதாரக் கட்டமைப்பைச் சரிப்படுத்தும் நடவடிக்கைகளால் உண்டாகின்ற சுமை, ஏழை எளிய மக்களின் மீதும் ஒடுக்கப்பட்ட மக்களின் மீதும் விழுந்து விடக்கூடாதே என்கின்ற கவலை மாநில அரசுக்கு எப்போதும் இருந்துவந்துள்ளது. பணவீக்கத்தை, குறிப்பாக, உணவு தானியங்கள் மற்றும் பிற இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். விலைகளில் ஏற்ற இறக்கத்தை ஏற்படுத்துகின்ற பெரிய பொருளாதார நடவடிக்கைகள் யாவும் பெரும்பாலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளபடியால், ஏழை எளிய மக்களைப் பாதிக்கக்கூடிய வகையில் உள்ள கொள்கைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று, மாநில அரசு வலியுறுத்துகிறது. மத்திய அரசு அண்மையில் அரிசியின் விற்பனை விலையை உயர்த்தியது மாநில அரசின்மீது ஒரு புதிய சுமையை ஏற்றி வைத்துள்ளது. கடந்தகாலத்தில், மாநில அரசு வழங்குகின்ற மானியத்தை அதிகரிப்பதன் மூலம் விலை உயர்வு மக்களைப் பாதிக்காதவகையில், அதனை அரசே ஏற்றுக்கொள்வதற்கு முடிந்த அளவு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறிருக்க, இப்போது இந்த அரசை எதிர்நோக்கியுள்ள கடுமையான நிதி இடர்ப்பாடுகளின் காரணமாக, அதுபோன்று இனிமேலும் மானியத்தை உயர்த்தி விலை உயர்வை அரசே ஏற்றுக்கொள்ள வழியில்லை. இந்தக் காரணத்தினால் அரிசி விற்பனை விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்படி இருந்தும்கூட, தமிழ் நாட்டில் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலைதான் நமது நாட்டிலேயே மிகக் குறைவானதாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் *1992* ஆம் ஆண்டில் பொது விநியோக முறையின் கீழ் உள்ள *22,000* நியாய விலைக்கடைகள் மூலம் *14.67* இலட்சம் டன் அரிசி விநியோகிக்கப்பட்டது என்பது நாம் பெருமளவில் பெருமைப்படத்தக்கதாகும். பொது விநியோகமுறை, மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் வாழ்கின்ற மக்களைச் சென்றடையும் வண்ணம் திறம்பட்ட வகையில் செயலாற்றும் திறன் அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது. பணிகளைத் தொடர்ந்து கண்காணித்து இடையறாமல் எச்சரிக்கையுடன் செயல்பட்டு, விநியோகப் பணிகளில் செய்யப்பட்ட மேம்பாடு காரணமாகப் பொது விநியோகமுறையின் கீழ் அனைத்து நுகர்வோர்க்கும் பொருள்கள் வழங்குதலுக்கு உறுதிசெய்யப்பட்டுள்ளது. குறுவை நெல் அறுவடை அமோகமாக இருந்தது. சம்பா நெல் சாகுபடியும் சிறந்த சாதனையாகக் குறிப்பிடத்தக்க அளவுக்கு உள்ளது. இவையிரண்டும் கொள்முதல் இலக்குகள் எய்தப் பெறுவதற்கு உறுதி செய்யும். இதனால், இந்த ஆண்டு முழுவதற்கும் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் இருப்பில் பற்றாக்குறை எதுவும் ஏற்படாது.

22. மக்களுக்குக் குறிப்பாக ஏழை, எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சிறப்பான வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்தித்தருவதை உறுதிசெய்வதற்காகவே இவ்வரசு எந்நாளும் பாடுபட்டு வருகிறது. அறுபது இலட்சம் பெண்களுக்கு இலவசச் சேலையும், அறுபது இலட்சம் ஆண்களுக்கு இலவச வேட்டியும் வழங்கும் திட்டம் இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. ரூ.45 கோடி செலவு பிடிக்கும் இத்திட்டம் ஏழை, எளிய மக்களுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். இம் மாநிலத்திலுள்ள நெசவாளர்களுக்கும் இத்திட்டத்தினால் வாழ்வு கிடைத்துள்ளது.

23. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம், வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. 9,226 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் "அனைவர்க்கும் நல்வாழ்வு" என்னும் கோட்பாடு நனவாகியுள்ளது. இந்த முகாம்களினால் 51.64 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். குடும்பநலப்பணியில் தமிழ்நாட்டின் செயல்திறன் நாட்டிலேயே தலை சிறந்தது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தடுப்பூசித் திட்டம் மிகமிகப் பயனுள்ளதாகவுள்ளது எனத் தனிப்பட்ட முறையில் நடத்தப்பெற்ற மதிப்பீட்டாய்வின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அரசின் அனைத்து மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் மருந்துப்பொருட்கள் தேவையான அளவில் இருப்பதற்கு உறுதிசெய்யும் வகையில், நடப்பு ஆண்டில் மருந்துகளுக்காக இதுவரை இல்லாத அளவிற்கு இப்போது பெரும் அளவில், அதாவது ரூ.70 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

24."புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" (Puratchi Thalaivi Dr.J.Jayalalitha Girl Child Protection Scheme) என்றழைக்கப்படும் ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பெண்குழந்தையின் முதலாவது பிறந்த தினத்தின்போதும், அக்குழந்தையின் கல்விக்காகவும் அக்குழந்தைக்கு இருபத்தொரு வயதாகும்போது ரூ.10,000 மொத்தத் தொகை வழங்கவும் உரிய வகையில் அக்குழந்தைக்குச் சிறப்புப் பயன்கள் வழங்க இது வகை செய்யும். கொடிய பழக்கமான பெண் சிசுக்கொலைக்கெதிராக சமுதாய விழிப்புணர்ச்சி எழுவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவரும் அதே வேளையில், மரபு விலங்கை உடைத்தெறியத் தாய்மார்களுக்கு ஊக்கமளிக்கவும், வேண்டாத பெண்குழந்தைக்கு நல்ல வாழ்க்கை அமைவதற்கான வாய்ப்பை அளிக்கவும் அரசு 'தொட்டில் திட்டம்' என்னும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இக்குழந்தைகளை அரசு தனது பாதுகாப்பில் எடுத்துக் கொண்டு பேணி வளர்க்கும். உலக வங்கியின் உதவியுடன், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. 6 திங்களிலிருந்து 36 திங்கள் வரையிலான வயதுத் தொகுதியில் உள்ள குழந்தைகளும் தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகிறார்கள். பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு மகளிர் குழுக்களுக்கு நிதி உதவி வழங்கும் 'ஒருங்கிணைந்த பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்' ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஓர் இலட்சம் பெண்கள் உதவி பெறுவார்கள். உடல் ஊனமுற்றோருக்கான திட்டங்களுக்குத் தனி முக்கியத்துவம் கொடுக்க, உடல் ஊனமுற்றோருக்காக ஒரு புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்வதில் மிகச் சிறந்த செயல்பாட்டுக்காக, எந்த மாநிலமும் பெற்றிராத அளவில், 15 தேசிய விருதுகளை வென்று தமிழ்நாடு தனிச் சிறப்பு எய்தியிருக்கிறது.


25. தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலனுக்கு மிகவுயர்ந்த முன்னுரிமை கொடுத்து வருகிறது. அரசால் எடுக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால் பின்னி லிமிடெட், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் ஆகிய நிறுவனங்களை மீண்டும் திறக்க முடிந்தது. துணி ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு விரைவான தீர்வு காணப்பட்டது. மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக, தொழில்களை நவீனமயமாக்கிப் புதுப்பித்துக் கட்டமைக்கின்ற நடவடிக்கைகளினால் ஏற்படும் உடன்விளைவுகள் அனைத்தையும் மாநில அரசே தனித்து எதிர்கொண்டு சமாளிக்க இயலாது. தொழில்களை நவீனப்படுத்தல், சீரமைத்தல் ஆகியவற்றின் மூலம் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு நியாயமாக உரியவற்றை வழங்க

**தேசிய புதுப்பிப்பு நிதியை விரைந்து செயற்படச் செய்து மாநிலங்களுக்கு முழு அளவில் ஆதரவளிக்க வேண்டும்.**

*26.* நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையானது, சுகாதாரம், சத்துணவு, தொடக்கக்கல்வி, பெண்கள் குழந்தைகள் நலத் திட்டங்கள் போன்ற இன்றியமையாத சமூகத்துறைகளின் மீதான முதலீட்டைக் குறைப்பதில் போய் முடியக்கூடாது என்னும் கவலை தேசிய அளவில் இருந்து வருகிறது. இந்தத் துறைகளில் மாநில அரசுகள் எப்போதும் முக்கியப் பங்கை வகித்து வந்துள்ளன. மாநிலங்கள் இந்த முக்கியத் துறைகளுக்குச் செய்துவரும் முதலீட்டின் அளவைத் தொடர்ந்து அப்படியே நிலை நிறுத்த இயலாவண்ணம் நிதி இடர்ப்பாடுகள் அவற்றை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றன. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைத் திட்டம் ஒன்றிற்காக, 500 மில்லியன் அமெரிக்க டாலர்கள் உதவியளிக்க உலக வங்கி அண்மையில் உறுதியளித்துள்ளது. ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பெரும்பங்கு வகிக்கும் மாநில அரசுகளுக்கு இந்த நிதி ஒதுக்கப்படவேண்டுமென்பதே நமது கோரிக்கையாகும்.

*27. 1993* மார்ச்சுக்குள் முடிவடையவிருக்கும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், அனைத்து ஊரகப் பகுதிகளிலும் அடிப்படைத் தேவைகளுக்கு வகைசெய்ய் அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி என்ற வகையில் மொத்தம் ரூ.*387* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பெருந்திட்டத்தின் கீழ் 7,502 கிலோமீட்டர் தொலைவுள்ள சாலைகளுக்கு மேம்பாட்டுப் பணிகள், *8,972* குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், *1.5* இலட்சம் தெரு விளக்குகள் அமைத்தல், *3,231* சிறுபாசன ஏரிகளை மேம்படுத்துதல், *2,198* தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், *2,879* சத்துணவு மையங்கள் கட்டுதல், *1,861* தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*28.* அண்மையில் *1992* டிசம்பர் திங்கள் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், உள்ளாட்சி மன்றங்கள் தொடர்பாக அரசியலமைப்புச் சட்டத்தில் முக்கியத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. உள்ளாட்சி மன்றங்களுக்குப் புத்துயிரளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், நாட்டின் அடித்தளமாக அமைந்துகிடக்கும் கிராமங்கள் அளவில் நல்ல ஜனநாயக மரபுகள் வளர்க்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் இருவேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. இருப்பினும், இது முற்றிலும் மாநிலங்களின் நிருவாக வரம்பிற்கு உட்பட்டதாகும். இவ்வாறு, செயற்படுத்துவதற்குக் கடினமான நடைமுறைகள் கொண்ட விதிகளைச் சட்டத் திருத்தங்கள் வாயிலாக மாநில அரசுகள் மீது சுமத்துவது என்பது, வெவ்வேறு மாநிலங்களில் நிலவும் வேறுபட்ட அமைப்பு முறைகளை மத்திய அரசு உணரத் தவறியது என்றே பொருளாகும். **இத்திருத்தங்கள் மாநிலங்களின் அதிகாரங்கள், பொறுப்புகளின் வரம்பிற்குள் ஊடுருவிப் பாதிப்பதாக அமைந்துள்ளன என்று இந்த அரசு கருதுகிறது. அரசின் இக்கருத்து நாடாளுமன்றத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவே இந்த அரசின் பிறழாத நிலையாகும். இரு நிலை நிருவாக அமைப்பு முறையைக் கொண்டு, தமிழ்நாடு சிறப்பாக இயங்கி வந்துள்ளது என்பதால், மாவட்ட அளவிலான நிருவாக அமைப்பு நிலை உட்பட, மூன்று நிலை நிருவாக அமைப்பைக் கொண்டு வருவதை இந்த அரசு ஆதரிக்கவில்லை.** ஒவ்வொரு நிலை அமைப்பிற்கும் இவற்றில் வரையறுக்கப்பட்டுள்ள தேர்தல் முறைகள்கூட, தமிழ்நாட்டில் நன்கு உருவாகி நிலைபெற்றுள்ள நடைமுறையிலிருந்து மிகவும் வேறுபட்டனவாக உள்ளன. இவ்வாறாக, மாநிலங்களின் அதிகாரங்கள் தொடர்பான அடிப்படைக் கொள்கை என்ற வகையிலும் சரி, அது தொடர்பான



நடைமுறைகள் என்ற வகையிலும் சரி, இம்மாநில அரசு அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்யக் கருதியுள்ள திருத்தங்களுக்கு எதிராக எடுத்த தனது நிலையை ஒருபோதும் மாற்றாமல் தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது. இந்த நிலை முழுவதுமாக மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் இத்துறையில் மாநிலங்களின் நிலைமை பாதுகாக்கப்படவேண்டும் என்றும் இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

29. ஊரக வளர்ச்சியை விரைவு படுத்துவதில் நிலச் சீர்திருத்தத்தின் முக்கியத்துவம் குறித்து பிரதமர் அவர்கள் முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். தமிழ்நாட்டில் தற்போதுள்ள நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட உபரி நிலங்கள் பெரும்பாலும் முழுவதும் பகிர்ந்தளிக்கப்பட்டு விட்டன. முந்தைய சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கும் நோக்கத்துடன்தான், இந்த அவை புதிய சட்டத்தை நிறைவேற்றியது. உபரியாகவுள்ள நிலங்களின் சில உரிமை மாற்றங்களைச் செல்லாததாக்கக் கோரும் இந்தச் சட்டம், 1991 அக்டோபர் திங்களிலிருந்து குடியரசுத் தலைவரின் இசைவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. இச்சட்டத்திற்கு விரைவில் ஒப்புதலளிக்குமாறு மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்துகிறது. இச்சட்டம் இம்மாநிலத்தில் நிலச்சீர்திருத்தத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கும்.

30. சென்னைக்கு அருகிலுள்ள ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை குறைவாகப் பெய்ததன் பயனாக, நீர் சேமிப்பளவு குறைந்ததால், சென்னை மாநகரில் ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் வழங்கும் முறையைக் கொண்டுவரவேண்டி வந்தது. நீர் சேமிப்பளவு குறைவாக இருந்தபோதிலும், பயனுள்ள வகையில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய, ரூ.24 கோடி செலவில் அவசரத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஓர் அங்கமாக, கடைக்கோடியிலுள்ள பகுதிகளுக்குக்கூட, முறையாகக் குடிநீர் கிடைக்க வகை செய்ய லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். குடிநீர்ப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு, கிருஷ்ணா நீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதே ஆகும். முதலமைச்சர் அவர்கள் 1993, ஜனவரித் திங்கள் 27 ஆம் நாளன்று ஐதராபாத்தில், ஆந்திரப் பிரதேச முதலமைச்சருடன் இது குறித்து விவாதித்தார். 1995, ஜூன் திங்களுக்குள் சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவருவதை உறுதிசெய்யும் வகையில், தெலுங்கு கங்கைத் திட்டத்தை விரைவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. திட்டப்பணி முடிவடைவதை உறுதி செய்ய, போதிய அளவு நிதி வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக ரூ.1,100 கோடி செலவிலான, சென்னை மாநகர் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு நிதியுதவி வழங்குமாறு உலக வங்கியை அணுகுவதற்குக் குறுக்கே எழுந்த தடைகள் அகற்றப்பட்டு, வழி வகுக்கப்பட்டுள்ளது.

31. இம்மாநிலத்தில் வீடில்லாத அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்திற்கு அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. நடப்பாண்டில் பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களின் கீழ் ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஏழை எளிய மக்களுக்குத் தற்போது அரசு நிலத்திலுள்ள வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டு மனைகளை வழங்குவதற்காக, ஒவ்வோராண்டும் நிலங்களைக் கையகப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. ஏழை எளிய குடும்பம் ஒவ்வொன்றும் வீட்டு மனையைப் பெற இயலும் வகையில், மூன்றாண்டு கால அளவில் வீட்டு மனைகள் வழங்கும் குறித்தகாலப் பெருந்திட்டம் ஒன்றை அரசு மேற்கொள்ளும்.

32.சில கொள்கைப் பிரச்சினைகளின் மீது உங்கள் நாட்டத்தை ஈர்ப்பதுடன், நமது மாநிலம் வளர்ச்சி பெறுவதற்கு அரசு பின்பற்றவிருக்கும் வழி எது? என்பதைக் குறிப்பிடுவதும் என்னுடைய நோக்கமாகும்.வெளிநாட்டுப் போராளிகளால் ஏற்படுத்தப்பட்ட மிகச்சிக்கலான பிரச்சினைகள், சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு, மிகச் சோதனையான நிதிநிலை, தேசீய பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட இக்கட்டான பொருளாதார முடிவுகள், பொது நிருவாகத்தில் காணப்பட்ட மோசமான சீர்கேடு ஆகியவை நமது மாநிலத்தை எதிர்கொண்ட நிலையில், இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. விருப்பு வெறுப்பற்ற நடுநிலை நோக்கோடு பார்க்கின்ற எவருக்கும்

இந்த அரசு அனைத்து முனைகளிலும் குறிப்பிடத் தகுந்த வகையில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது என்பது தெரிய வரும். சட்டம்-ஒழுங்கு மீண்டும் நிலை நாட்டப்பட்டுள்ளது. அயல்நாட்டுப் போராளிகளால் ஏற்படும் அபாயம் ஒடுக்கப்பட்டுள்ளது; நெருக்கடியான நிதிநிலை திறம்படக் கையாளப்பட்டு, வளர்ச்சிக்கு மீண்டும் வேகம் ஊட்டப்பட்டுள்ளது. அனைத்திற்கும் மேலாக, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

*33.* தமிழ்நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் மிகச் சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதற்கு உறுதிசெய்ய இவ்வரசு தொடர்ந்து பாடுபடும். வெளிநாட்டுப் போராளிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து விழிப்புடன் கண்காணிக்கப்படும். அவர்கள் இம்மாநிலத்தில்கால்பெருவிரலை ஊன்றி நிற்பதற்குக்கூட அனுமதிக்கப்படமாட்டார்கள். வகுப்புவாத நடவடிக்கைகளும் அவற்றோடிணைந்து காணப்படும் பகைமையுணர்வுகளும், இம்மாநிலத்தின் சமூகக் கட்டமைப்பைக் குலைக்க அனுமதிக்கப்படமாட்டாது. சமூக நீதியை நிலை நாட்ட, இவ்வரசு உறுதியான ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொண்டு அதன் மூலம் பெரும்பான்மை மக்களுக்கு நம்பிக்கையூட்டி அவர்களுக்கு மெய்யான அனுகூலங்களையும் வழங்கும். தேசிய முதலீடுகளில் தமிழ்நாட்டிற்கு உரிமையான பங்கினைப் பெற அரசு பெருமுயற்சி மேற்கொள்ளும். புதிய பொருளாதாரக் கொள்கையின் ஓர் அங்கமாகவுள்ள அடிப்படைக் கட்டமைப்பைச் சரிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு நடுவே, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்து இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கும்.

*34.* பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசு மேற்கொண்ட உறுதியான தீர்க்கதரிசனமான நடவடிக்கைகளை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் முழுமையாக வரவேற்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அமைதி, ஒற்றுமையை நிலைநாட்டுவதிலும், நிலைத்த பொருளாதார வளர்ச்சியைக் காண்பதிலும் இவ்வரசு மேற்கொண்ட புதிய சீரிய முயற்சிகள் தமிழ்நாட்டிற்கு அகில இந்திய அளவில் பெருமதிப்பைப் பெற்றுத்தந்துள்ளன. இது அனைவரும் வியந்து போற்றுவதற்குரிய தன்னிகரற்ற சாதனையாகும். இந்தப் பாராட்டை ஆர்வத்தோடும் எழுச்சியோடும் உழைத்துக் கட்டிக் காத்துக் கொள்ளவேண்டும். இம்மாமன்றத்தில் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் விவாதங்கள் தமிழகத்தை முன்னேற்றமும் செழிப்பும் மிக்க பாதையில் அழைத்துச் செல்வதாக அமையும் என்று நான் நம்புகிறேன். ஏழை, எளியவர்கள் மற்றும் வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோர்க்குச் சிறப்பான வாழ்க்கைத்தரத்தைப் பெற்றுத்தருவதற்கு இவ்வரசு எப்போதும் பாடுபடும். எப்போதும் இம்மாநிலத்தின் முன்னேற்றத்திற்கே முதலிடம் தந்து, இம்மாமன்றத்தில் நீங்கள் மேற்கொள்ளும் விவாதங்களும் கருத்துக்களும், ஆக்கபூர்வமானவையாகவும் பொருள் பொதிந்தவையாகவும் அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. **நன்றி, வணக்கம்.**

- **மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்தான் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் (டி.என்.சி.ஏ.) உறுப்பினராகச் சேர்ந்த முதல் பெண் உறுப்பினராவார்; 1975-இல் அவர் இச்சங்கத்தில் உறுப்பினரானார்; அதுவரை இதில் ஆண்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தார்கள். இப்போதும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதில் உறுப்பினரே!**
- **சென்னை-மயிலாப்பூரில் உள்ள திருக்குளத்தில் மூழ்கி இறந்துபோன மூன்று சிறுவர்களின் குடும்பங்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25 ஆயிரம் நிதியுதவி வழங்கினார்.**
- **சென்னை மாநகரில், மிகச் சிறந்த முறையில் பத்தாண்டுக் காலம் பணி முடித்த 140 காவலர்களுக்கு முதலமைச்சர் பதக்கங்கள், சென்னை நகரக் காவல் துறை ஆணையரால் (12.2.1993) வழங்கப்பட்டன.**




# தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் லிட்.,


(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

தருமபுரி-5.

## மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் 1992-93






ப. வேங்கடசாமி
திட்ட அலுவலர் மற்றும்
மேலாண்மை இயக்குநர்
மர்வட்ட வளர்ச்சிக் கழகம், தருமபுரி

ஏ. தசரதன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
பெருந்தலைவர், மாவட்ட வளர்ச்சிக் கழகம்
தருமபுரி

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras–600 001.

## Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

Licence No. TN/MS/(C)/PP-23



